விலை ரூ.25

ஆகட்டும்

மரியின் உதவி மரியல் மாத இதழ்



மலர் - 04 இதழ் - 10 ஆகஸ்டு - 2026

பதிப்பாசிரியர் பக்கம்

அருட்பணி சாமி ம.ஊ.ச



அன்னையின் விண்ணேற்பு அகிலத்தின் நம்பிக்கையின் ஒளிவிளக்கு

ஆகஸ்ட் 15 ஆம் நாள், கத்தோலிக்கத் திரு அவை அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவை மிகுந்த பக்திப் பரவசத்துடனும், இறைநம்பிக்கையுடனும் கொண்டாடுகிறது. இறையன்னை மரியா தனது மண்ணக வாழ்வை நிறைவு செய்தபின், ஆன்மாவோடும் உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பது கத்தோலிக்கத் திரு அவையின் நம்பிக்கை அறிக்கையாகும்.

இறைவனின் மீட்புத் திட்டத்திற்குத் தன்னை முழுமையாகக் கையளித்தவர் அன்னை மரியா. "இதோ ஆண்டவரின் அடிமை, உம் வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" (லூக்கா 1:38) என்ற அன்னையின் தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் இறைவனின் அருளைப் நிறைவாகப் பெற்றுத் தந்தன. இறைமகனைத் தன் திருவயிற்றில் சுமந்து, அவரோடு சிலுவை வரை பயணித்த அன்னைக்கு, சாவுக்கும் அழிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு நித்திய வாழ்வை இறைவன் பரிசாக வழங்கினார்.

உள்ளே

பதிப்பாசிரியர் பக்கம்	-	1-2
மரியாவின் ஆன்மிகம்	-	3-4
கவிதைப் பக்கம்	-	5
அன்னையின் திருத்தலம் நோக்கி	-	6-11
விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி	-	12-14
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்	-	15-21
அன்னை மரியாவின் திருப்பயணங்கள்	-	22-25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள்	-	26-27
கிறிஸ்தவர்களின் சகாயமே	-	28-30
அருட்சகோதரி உபால்தெஸ்கா	-	31-32
திருஅவை வரலாற்றில் அன்னை மரியாவின் காட்சிகள்	-	33-35
விவிலிய வினாடி வினா	-	36

இன்றைய நுகர்வோர் உலகில் மனித உடல் வெறும் சிற்றின்பத்திற்கான பொருளாகவும், தற்காலிகமான ஒன்றாகவும் பார்க்கப்படுகிறது. ஆனால், மரியாவின் விண்ணேற்பு நிகழ்வு, நமது உடலும் ஆன்மாவும் இறைவனின் மாட்சிமைக்குரியவை என்பதை நமக்கு நினைவுறுத்துகிறது. மனித உடலானது தூய ஆவியாரின் ஆலயம் என்றும், நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுந்து இறைவனின் மகிமையில் பங்குபெறுவோம் என்றும் அன்னை மரியா நமக்கு உறுதியளிக்கிறார்.

அன்னை மரியா தனது (Magnificat) புகழ்பாடலில் முழங்கியது போல: "வல்லமையுள்ளவர் எனக்கு அரியன செய்துள்ளார்... தாழ்நிலையில் இருந்தோரை உயர்த்தியுள்ளார்" *(லூக்கா 1:49-52)*. அன்னையின் விண்ணேற்பு என்பது ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அமைதியுடன் இறைவனை நம்பியிருப்போருக்கான வெற்றியின் முன்னடையாளமாக இருக்கின்றது.

இயேசுவின் பிறப்பின் போது மரியா அவரை எவ்வாறு மிகுந்த மனத் தாழ்மையோடு இந்த உலகிற்கு வரவேற்றாரோ, அவ்வாறே இப்போது இயேசு மரியாவை நித்திய காலத்திற்கும் மகிமையோடு விண்ணகத்திற்கு வரவேற்கிறார்.

இறைவனின் படைப்புகள் அனைத்திலும் மிக அழகிய மற்றும் தூய்மையான படைப்பாக விளங்கும் மரியா, முதன்முறையாக தனது மனித உடலோடு விண்ணகத்தில் வீற்றிருக்கின்றார். மேலும் அனைத்து வானதூதர்களின் அணிகளுக்கும் மேலாக அவருக்கு மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டு, அவரது உன்னத நிலைக்குரிய மரியாதையையும் புகழையும் அங்கேப் பெறுகிறார்.

விண்ணேற்புப் பெருவிழா என்பது வெறும் வரலாற்று நிகழ்வோ அல்லது வழக்கமான ஒரு கொண்டாட்டமோ இல்லை. அது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அளிக்கப்படும் எதிர்கால நம்பிக்கை. மண்ணகப் போராட்டங்கள், துன்பங்கள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியில் பயணிக்கும் நமக்கு, அன்னை மரியா விண்ணகத்திலிருந்து வழிகாட்டும் விண்மீனாகத் திகழ்கிறார்.

நாமும் அன்னையைப் போல இறைவனின் திருவுளத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, தூய்மையான வாழ்வை மேற்கொண்டு, பிறருக்கு அன்பின் கரம் நீட்டும்போது, விண்ணக மகிமையில் பங்குபெறும் தகுதியைப் பெறுவோம். அன்னை மரியாயின் பரிந்துரையால் நம் குடும்பங்களிலும், உலகிலும் அமைதியும் நம்பிக்கையும் மலரட்டும்.



மரியாவின் ஆன்மிகம்

அருட்பணி. குழந்தைசாமி ம.ஊ.ச
மறைமாநில அதிபர்

அன்னை மரியாவின் சீடத்துவ ஆன்மீக மையம் மனு உருவான இறை வார்த்தையே நம் தாய் மரியா நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு தரும் வார்த்தைக்கு செவிமடுத்து நாளும் தியானித்து, அதற்கேற்ப தனது வாழ்வை அமைத்து, கிறிஸ்துவ வாழ்வின் நிறைவை நோக்கி தனது திருமகனோடு இணைந்து, கடவுளின் திருவுளத்தை முழு மனதுடன் நிறைவேற்றி, எதிர்நோக்கோடு பயணித்த தனது முன்மாதிரியான வாழ்வு கலங்கரை விளக்காக திகழ்கின்றது என்றால் மிகை ஆகாது. புனித லூக்கா எழுதிய நற்செய்தியில் இயேசு நோன்பை பற்றி பேசுகின்ற பொழுது இவ்வாறு குறிப்பிடுகின்றார். எவரும் புதிய ஆடையில் இருந்து ஒரு துண்டை கிழித்து அதை பழைய ஆடைகளோடு ஒட்டு போடுவதில்லை. அவ்வாறு ஒட்டு போட்டால் புதிய ஆடையும் கிழியும் புதிய துண்டும் பழையதோடு பொருந்தாது. அது போலப் பழைய தோற்பைகளில் எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லைஞ ஊற்றி வைத்தால் புதிய மது தோற்ப்பைகளை வெடிக்கச் செய்யும். மதுவும் சிந்திப் போகும் தோற்பைகளும் பாழாகும். புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றி வைக்க வேண்டும். பழைய திராட்சை மதுவை குடித்தவர் எவரும் புதியதை விரும்ப மாட்டார் ஏனெனில் பழையதே நல்லது என்பது அவர் கருத்து (லூக்கா 6, 36 - 39). அன்பார்ந்தவர்களே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இப்படிப்பினை நம் ஒவ்வொருவரின் கவனத்தையும் ஈர்க்கின்றது. எவரும் புதிய ஆடையில் இருந்து ஒரு துண்டை கிழித்து அதை பழைய ஆடையோடு ஒட்டு போடுவதில்லை. அவ்வாறு ஒட்டு போட்டால் புதிய ஆடையும் கிழியும் புதிய துண்டும் பழையதோடு பொருந்தாது. இதன் உட்பொருளை தியானித்தப் பொழுது இயேசு எத்தகைய படிப்பினையை நம்முடைய கவனத்திற்கு முன்வைக்கின்றார் என என்னால் உணர முடிந்தது. புதிய ஆடை பழைய ஆடை புதிய மது பழைய மது இவை ஒவ்வொன்றின் தன்மையை நாம் அவரிடமிருந்து கற்கவும் கடைப்பிடிக்க ஆண்டவர் விரும்புகின்றார். பழையதும் புதியதும் இணைத்து ஒன்றென ஒரு காலமும் கருதி ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதை விளக்குகின்றார். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியும் அவரது வாழ்வும் புதிய பரிணாமங்களை தன்னகத்தே

கொண்டு ஒரு புதிய மனநிலையோடு கிறிஸ்தவ வாழ்வின் நிறைவாம் மூவொரு இறைவனோடு ஒன்றித்து மகிழவும் சான்று பகிரவும் அவரே நம்முள் செயலாற்றுகின்றார். ஆக நமது அன்றாட கிறித்துவ வாழ்வில் பழையதும் புதியதும் ஒன்றே என நினைத்து வாழ்வது முறையல்ல. பழையது என்பது பழையது புதியது என்பது புதியது நம்பிக்கையின் ஒளியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மனநிலையோடு தூய ஆவியின் வழியில் செயல்பட்டு, உண்மையானவை எவையோ கண்ணியமானவை எவையோ நேர்மையானவை எவையோ தூய்மையானவை எவையோ விரும்பத்தக்கவை எவையோ பாராட்டுதற்குரிய வையவையோ நற்பண்பு உடையவை எவையோ போற்றுதற்குரியவை எவையோ அவைகளையே மனதில் நிறுத்தி பயணிக்க கடவுள் விரும்புகின்றார் (பிலி. 4, 8).

The life of Christian faith assumed and lived in communion with the person of Christ cannot be a life of compromise. It|s rather a life of commitment with fidelity with all its implications.

எனவே அன்னையின் அன்பு பிள்ளைகளாய் வாழ்ந்திட மனிதம் இறையன்பில் ஒன்றித்து மகிழ்ந்திட... அன்னையின் வழியில் கற்போம்... திரு அவையோடு இணைந்து நாளும் கடைபிடிப்போம். நமது அன்றாட வாழ்வே நம்மோடு வாழும் சகோதர சகோதரிகளுக்கு நற்செய்தியாக அமைத்து கற்பிப்போம்...

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சி 1: கோமாவிலிருந்து மீட்டிறக்கிய புதுமை

சாட்சி பகிர்பவர்: பங்குத் தந்தை

கடந்த ஜனவரி 27-ஆம் தேதி என் தம்பிக்குக் கடுமையான விபத்து ஏற்பட்டது. மூளையில் பலத்த காயமடைந்து, இரத்தக் கசிவு (Subdural Hemorrhage) ஏற்பட்டதால் பெங்களூரு நாராயணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

மருத்துவர்கள் கைவிட்ட நிலையில், சுமார் மூன்று மாதங்கள் அவன் கோமா நிலையிலேயே இருந்தான். அவன் பிழைப்பதற்கான வாய்ப்பு 1மூ கூட இல்லை என்று மருத்துவர்கள் கூறியபோதிலும், நாங்கள் ஆண்டவர் மீது வைத்த நம்பிக்கையை விடவில்லை. உருக்கமான ஜெபத்தின் பலனாக, இறைவன் அவனை அற்புதமாகக் குணப்படுத்தி உயிர் பிழைக்கச் செய்துள்ளார் அதிசயங்களைச் செய்யும் இறைவனுக்கே கோடி நன்றிகள்.

கவிதைப் பக்கம்

மீட்புப் பயணம் - 8

முனைவர். விண்ணரசன்

கதை மாந்தர் - யோசேப்பு

யாக்கோப்பு பெற்ற பன்னிரு புதல்வருள்
யோசேப்பு என்பவர் பதினொன்று ஆமாம்
முதிர்ந்த வயதில் பிறந்த பிள்ளையாம்
முழுதான அன்பினில் பிணைந்த பிள்ளையாம்

அறிவுத் திறமாம் ஆற்றல் வரமாம்
தெள்ளமாய் பேச்சியாம் வல்லிய காட்சியாம்
தந்தை தாய்க்கு உகந்த மாட்சியாம்
தவறு இழைப்பதை உரைக்கும் சாட்சியாம்

பதினொரு வயது நிரம்பும் வரையுள்
பதமொடு சொகுசாய் திரிந்த செல்வமாம்
பதின்மர் யாவரின் பொறாமை மனதில்
பதிக்கப் பெற்ற கசப்பு வெல்லமாம்

நிழற்படம் போன்ற கனவுகள் எதற்கும்
நிசமான போதனை கொடுப்பது சிறப்பாம்
சிலபல கனவுகள் கான்பதன் பொறுப்பை
சகோதரர்கு சொன்னது வெறுப்பாம்

தடயம் இல்லாம் கொன்று மாய்த்திட
தருனம் பார்த்தனர் பதின்மரும் ஓர்பட
பையப் பேசி மாய்த்திட உருங்கால்
வாணிபர் வசமே விற்றனர் தரும்சால்

போத்திபார் எண்ணம் போர்ப்படை தலைவனின்
பாத்திரம் தன்னில் பத்திரம் ஆனார்
ஆண்டவர் என்றும் யோசேப்புவிடம் இருந்தார்
ஆதலின் போத்திபரும் பெரும்புகழ் அடைந்தார்.

பொறுப்புக்கள் முழுவதும் யோசேப்பு பெற்றார்
கருத்துக்கள் நிறைவார் பாராட்டப் பெற்றார்.
போத்திபர் மனைவியின் கள்மனச் சூழ்ச்சியால்
கொடும்சினக் கைதியாய் சிறைவாசம் உற்றார்

கைதியாய் காலங்கள் கழித்துவிட வில்லை
கனவுள போதனை கைவிடவும் இல்லை
எகிப்தின் ஆளுனராய் உயர்ந்தர் யோசேப்பு
எதிர்த்த சோதரரையும் உயர்த்தினார் பாராட்டு

அன்னையின்

91 திருத்தலம் நோக்கி



தூய மரியன்னை பேராலயம், ஆசென் - ஜெர்மனி
அருட்பணி. சகாயராசு ம.ஊ.ச, இத்தாலி

லூர்து அன்னை, பாத்திமா அன்னை, பூண்டி மாதா, வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை என்று தான் காட்சி தந்த இடங்களின் பெயர்களை தன்னகத்தே தாங்கி அம்மக்களோடு இணைந்து, இயைந்து வாழும் இறைவனின் அன்னை கன்னிமரியா, இத்தாலியில் உள்ள பசிலிக்காத்தா (Basilicata) மகாணத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான மதேரா நகரில் புருனா அன்னை என்ற பெயர் தாங்கி அருள்பாலித்து வருகிறார்.

அன்னை ஏன் புருனா என்கிற அடைமொழியோடு அழைக்கப்படுகிறார் என்பதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அக்காரணங்களில் ஒன்று, மத்தியகாலத்தில் வடஇத்தாலியைச் சார்ந்த லொம்பார்தோ இனவீரர்கள் போரில் அணிந்திருந்த மார்புகவசத்தை புனாஞா (Brunja) என்றழைத்தனர். அக்காலக் கட்டத்தில் லொம்பார்தோ இனம் தெற்கு இத்தாலியையும் ஆண்டு வந்தது. அப்போது, தங்களின் பாதுகாவலியாக இருக்கும் அன்னைக்கு, "புருனா" என்கிற அடைமொழியை அளித்திருக்கலாம் என்று கருதுகின்றனர். ஒருசிலரோ, அன்னை மரியா தன் உறவினளான எலிசபெத்தை சந்தித்த இடமாகிய ஹெப்ரோன் (Hebron) என்கிற யூதேயா நகரின் பெயர் மருவி "புருனா" என்றழைக்கப்படுவதாக கூறுகின்றனர். மற்றும் சிலர், இத்திருத்தலத்தில் உள்ள பைசாந்திய மரபை சார்ந்த அன்னையின் திருஉருவமாமானது மெராவியாவில் உள்ள புர்னோ (Brno) என்கிற நகரில் வரையப்பட்டதால், "புருனா" என்றழைக்கப்படுவதாக சொல்கின்றனர். எது எப்படி இருந்தாலும், தன் பரிந்துரை செபத்தின் வாயிலாக நம்மை அனுதினமும் பாதுகாத்து வருகின்ற அன்னை நம் மாபுகவசமாக உள்ளார் என்று சொல்வது பொருத்தம் தானே

தெற்கு இத்தாலியில் உள்ள மதேரா நகருக்கும், பைசாந்திய கலாச்சாரத்திற்கும் என்ன தொடர்பு என்கிற கேள்வி நம் உள்ளத்தில் எழுவது இயல்பானதே. உரோமை பேரரசின் வரலாறு இடியாப்பச் சிக்கல் போன்றது. உரோமை பேரரசர் முதலாம் தியோடோசியஸ், தன் பேரரசை வடக்கு, கிழக்காக பிரித்து தன் இரண்டு மகன்களில் ஒருவரான ஹொனோரியஸை வடக்கு உரோமை பேரரசிற்கும், அர்காடியுஸை கிழக்கு உரோமை பேரரசரிற்கும் அரசர்கள் ஆக்கினார். கி.பி. 395ஆம் ஆண்டு முதலாம் தியோடோசியஸ் காலமானவுடன் இப்பிரிவினை நிரந்தரமாகி இரண்டு அரசுகளாகப் பிரிந்தன. இவற்றில், வடக்கு உரோமை பேரரசு இலத்தீன் மொழி மற்றும் கலாச்சாரத்தையும்,



கிழக்கு உரோமை பேரரசு கிரேக்க மொழி மற்றும் ஹெல்லெனிசிஸ்டு கலாச்சாரத்தையும் பின்பற்ற தொடங்கினர். அன்றிலிருந்து, இரு சகோதர பேரரசுகளும் ஒருவர் ஒருவரை தாக்குவதும், ஒரு மற்றவரின் பகுதிகளை வென்று தங்கள் பேரரசை விரிவாக்குவதும் அன்றாட நிகழ்வுகளாயின. கி.பி. 478ஆம் ஆண்டு ஜெர்மானிக் படையெடுப்பில் உரோமை வீழ்ந்தது. வடக்கு உரோமை பேரரசு முடிவுக்கு வந்தது. ஆனால், கிழக்கு உரோமை பேரரசு பல்வேறு தோல்விகள் மற்றும் வெற்றிகளுக்கிடையில் வளர்ந்து கொண்டேயிருந்தது. பேரரசர் முதலாம் யுஸ்தீனியன் (527-565) காலத்தில் பேரரசு வலிமை மிகுந்ததாகவும். பல்வேறு படையெடுப்புகளில் வென்று பேரரசின் எல்லைகளும் விரிவானது. இக்காலக்கட்டத்தில் தெற்கு இத்தாலியும் கிழக்கு உரோமை பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தது. வரலாற்றின் தொன்மையான காலத்தில் இப்பகுதி கிரேக்கர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. அக்காலக்கட்டத்தின் எச்சங்களான கிரேக்க கலாச்சாரம், நகர வடிவமைப்பு போன்றவை இப்பகுதியில் நிலைத்திருந்தன. தற்போது, மீண்டும் ஹெல்லெனிசிஸ்டு கலாச்சாரம் தலைதூக்க ஆரம்பித்தது. கீழைப் பேரரசின் செழித்தோங்கிய திருஅவையின் தாக்கங்கள் அங்கு எழுப்பப்பட்ட ஆலயங்களிலும், அங்கு நிறுவப்பட்ட திருஉருவங்களிலும் வெளிப்பட்டன. இவ்வோவியங்களின் அழகை அங்கிருக்கும் மொசைக் ஓவியங்கள் மற்றும் ஐகான் (Icon) திருஉருவங்களில் இன்றும் நாம் காணலாம். மொழி, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், போர் வெற்றிகள், எல்லை விரிவாக்கம் என்று பல்வேறு வகைகளில் செழிந்தோங்கி கீழை உரோமை பேரரசு, கி.பி. 1453ஆம் ஆண்டு துருக்கிய ஓட்டமான் பேரரசிடம் தோல்வியை தழுவியது. கீழை உரோமை பேரரசும் முடிவுக்கு வந்தது.

மலைகள், குன்றுகள், பள்ளத்தாக்குகள் என்று இயற்கை எழில் நிறைந்ததாக மதேரா நகர் அமைந்துள்ளது. பள்ளத்தாக்குகளில் மக்கள் வசிப்பிடங்களும்,



குன்றுகள் மீது ஆலயங்களும் அமைந்து, "உங்களோடு என்றும் இருக்கிறேன்" என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு உயிர்தந்து, அம்மக்களை இறைப்பராமரிப்பு என்றும் ஆட்கொள்வதாக இவ்வாலயங்கள் அமைந்துள்ளன. இங்குள்ள மலைகளில் குகைகளை தோண்டி, தொன்மையான மக்கள் தங்கள் வசிப்பிடங்களை ஏற்படுத்தி வாழ்ந்தனர். இப்பகுதியானது சாஸ்ஸி (Sassi) என்றழைக்கப்படுகிறது. உலகில் உள்ள மிகத் தொன்மையான மக்கள் வாழ்விடங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. கி.பி. 1950களில் சுகாரதாக் குறைப்பாடுகள், நெருக்கடி ஆகியவற்றால் இப்பகுதியில் மக்கள் வாழ தடைசெய்யப்பட்டது. ஆனால், இன்றும் பார்வையாளர்கள் சென்று பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். கி.பி. 1993ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் இந்நகரானது யுனெஸ்கோ வரலாற்று பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது. வரலாற்று தொன்மையும், கலாச்சார சிறப்பும் நிறைந்த இந்நகரம் பல முக்கிய நிகழ்வுகளின் மையமாக இன்றும் திகழ்கிறது. கி.பி. 2021 ஆம் ஆண்டு இந்நகரில் ஜி20 நாடுகளின் வெளியுற அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது. 2024ஆம் ஆண்டு ஜி7 நாடுகளின் குடும்ப மற்றும் சுகாதார அமைச்சர்களின் மாநாடு இங்கு கூட்டப்பட்டது.

இத்தகைய தொன்மையும், சிறப்பும் உடைய நகரின் மையமாக, அனைத்து மக்களின் அன்பையும் பெற்று, பாதுகாப்பு அரணாக, அரவணைக்கும் அன்புத் தாயாக இருப்பவர் புருனா அன்னை ஆவார். மதேரா மறைமாவட்ட பேராலயமாக திகழும் புருனா அன்னை பேராலயத்தை கட்ட கி.பி. 1230ஆம் ஆண்டு முடிவெடுத்த போது, அதற்கான தகுந்த இடத்தை தேடினர். அப்போது, அங்கிருந்த பழமையான ஆசீர்வாதப்பர் துறவற மடத்தின் ஒரு பகுதியில் ஆலயம் கட்டலாம் என்று முடிவெடுத்தனர். கி.பி. 1093-94 காலக்கட்டத்தில் திருத்தந்தை இரண்டாம் அர்பன் அவர்கள் இங்கு தங்கியிருந்தார் என்பது இவ்விடத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும். கட்டிட தொடங்கி நிறைவுற ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆனது. முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பேராலயம் கி.பி. 1270ஆம் ஆண்டு மதேரா நகர் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டது. மதேரா நகரின் பாதுகாவலியாக இருந்த புருனா அன்னை ஆலயமானது கி.பி. 1627ஆம் ஆண்டு மதேரா நகரின் பேராயராக இருந்த பேராயர் பப்ரிசியோ அந்தினோரி அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

இருபள்ளத்தாக்குகளின் நடுவில் நகரின் உயரமான இடத்தில் வானுயர்ந்து நிற்கும் வண்ணமாக இப்பேராலயம் அமைய அவ்விடத்தை 6 மீட்டர் அளவிற்கு மண் நிரப்பி உயர்த்தினார்கள். மேற்கு நோக்கி கட்டப்பட்டுள்ள இவ்வாலயமானது

இலத்தீன் சிலுவை வடிவில் கட்டப்பட்டுள்ளது. காலஓட்டத்தில் பல்வேறு புணரமைப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் காரணமாக ஆலயத்தில் உட்புறம் மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தாலும், ஆலயத்தின் புற வடிவமைப்பானது எந்தவித மாற்றமும் இல்லாமல், தொடக்க கால கட்டிட வடிவிலேயே இன்றும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் முகப்பின் மையத்தை 16 ஆரங்களை கொண்ட மிகப்பெரிய விரிந்த மலர் (rosone) அலங்கரிக்கிறது. இம்மலரின் உச்சியில் அலகையை தன் காலால் மிதிக்கும் புனித மிக்கேல் வானதூதரும், இருபக்கங்களிலும் அரவணைத்து நிற்கும் இரண்டு ஆண் உருவங்களும், மலரை தாங்கிப் பிடிக்கும் கிரேக்க புராண உருவகமான அட்லாசும் செதுக்கப்பட்டுள்ளனர். இம்மலரை தாங்கிப்பிடிக்கும் வண்ணமாக முகப்பில் நான்கு பெரிய தூண்களும். மலரை அலங்கரிக்கும் வண்ணமாக 12 தோரணங்கள் மேலிருந்து தொங்கும் வகையிலும் செதுக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு தூண்கள் நான்கு நற்செய்தியாளர்களையும், 12 தோரணங்கள் 12 திருத்தூதர்களையும் குறிக்கின்றன. ஆலய முகப்பின் உள்ள மையக் கதவின் மேல் புருனா அன்னையின் திருஉருவமும், கதவின் இருபுறத்திலும் புனித பேதுரு மற்றும் புனித பவுல் அடிகளாரின் திருஉருவங்களும் சிலைகளாக செதுக்கப்பட்டுள்ளன. முகப்பின் இருபுறத்திலும் புனித யுஸ்தாக்கியோ மற்றும் புனித தியோபிஸ்தாவின் உருவங்கள் புடைப்பு சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. ஆலய முகப்பின் வலப்புறம் உள்ள பேராலய சதுக்கத்தை நோக்கிய பகுதியில் இரு கதவுகள் உள்ளன. இக்கதவுகளின் இருபுறமும் சிலிர்த்து அமர்ந்திருக்கும் இரு சிங்கள் ஆலயத்தை தாங்கி நிற்பது போல் செதுக்கப்பட்டுள்ளன. எனவே, இக்கதவானது சிங்கங்களின் கதவு என்றழைக்கப்படுகிறது. இக்கதவின் மேல் பகுதியில், ஓரிறைக் கொள்கையின் (monotheism) தந்தையாகிய ஆபிரகாமின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இவ்வாலயம் கட்டப்பட்ட காலத்தில், மதேரா நகரில் ஓரிறைக் கொள்கை கடைப்பிடித்த யூதம், கிறித்துவம் மற்றும் இஸ்லாம் மதத்தினர் வாழ்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைக்கே மதநல்லிணகத்திற்கு எத்தகைய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பது இதிலிருந்து புலப்படுகிறது. ஆலய சதுக்கத்தில் 52 மீட்டர் உயரமுடைய நான்கு அடுக்குகள் கொண்ட ஆலய மணிக்கூண்டும் நிறுப்பட்டுள்ளது.




இலத்தீன் சிலுவை வடிவில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் மையப்பகுதியானது மூன்று தாழ்வாரங்கள் உடையதாக கட்டப்பட்டுள்ளது. அழகுற எழுப்பப்பட்டுள்ள ஆலயத்தின் மையப் பீடமானது பளபளக்கும் மரத்தினால் 60 குருக்கள் அமர்ந்துசெபிக்கும்வண்ணமாக, கி.பி. 1453ஆம் ஆண்டு ஜோவான்னி தன்தினோ என்கிற புகழ்பெற்ற கலைஞரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. மையப்பீடமானது கி.பி. 1627ஆம் புதுப்பிக்கப்பட்ட போது பக்ஷப்ரிசியோ



சாந்தாபேதே என்கிற ஓவியரால் வரையப்பட்ட "கன்னிமரியும் புனிதர்களும்" என்கிற ஓவியம் பீடத்தின் மேல் நிறுவப்பட்டது. ஆலயத்தின் மையத் தாழ்வாரத்தை தாங்கி பிடிக்க இருபுறங்களிலும் ஐந்து தூண்கள் என மொத்தம் பத்து தூண்கள் கட்டப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு இயற்கையான ஒளி கிடைக்க இத்தூண்களுக்கு மேல் அகலமான சன்னல்களும் நிறுவப்பட்டுள்ளன. இப்பகுதிகள் கி.பி. 1776ஆம் புதுப்பிக்கப்பட்டு, தூண்களின் மேல்புறத்தில் தங்கமுலாம் பூசப்பட்டு அலங்கரிக்கப்பட்டன.

இருபுறமும் அமைந்துள்ள தாழ்வாரங்களில் பல்வேறு பலிப்பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இடதுபுற முதல் பலிப்பீடத்தில், புருனா அன்னையின் திருஓவியமானது வணக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ளது. இப்புகழ்பெற்ற ஓவியமானது கி.பி. 1270ஆம் ஆண்டு தராந்தோ நகர் ரினால்தோ என்பவரால் வரையப்பட்டது. இத்திருஓவியமானது, எழில் வதனம் நிறைந்த அன்னை தன் திருக்கரங்களில் குழந்தை இயேசுவை தாங்கியிருக்க, குழந்தை இயேசு தன் இருவிரல்களால் நம்மை ஆசீர்வதிப்பது போல வரையப்பட்டுள்ளது. இரண்டாவது பலிப்பீடத்தில், மதேரா நகர் புனித யோவானின் திருப்பண்டங்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. புனித அன்னாவின் பீடம் என்றழைக்கப்படும் மூன்றாவது பீடமானது பிரான்செஸ்கோ மத்திரினாவின் ஓவியத்தால் அழகுப்படுத்தப்பட்டுள்ளது. நான்காவது பீடமானது "நற்கருணை ஆலயமாக" ஆண்டவரின் நிரந்தர பிரசன்னம் உள்ள இடமாக அமைந்துள்ளது. ஐந்தாவது பீடத்தில், ஓவியர் ஜீலியோ பெர்சியோ வரைந்த "வானதூதர் கபிரியேல் அன்னைக்கு மங்களவார்த்தை கூறிய" நிகழ்வை சித்தரிக்கும் ஓவியம் நிறுவப்பட்டுள்ளது. இறுதியாக, ஆறாவது பீடமானது மற்றொரு சிறப்புமிக்க பீடமாக அமைந்துள்ளது. இங்கு, கி.பி. 1530 — 1534ஆம் ஆண்டுகளில் புகழ்பெற்ற சிற்பிகளான ஆல்தோபெல்லோ பெர்சியோ மற்றும் சன்னாசரோ அலெஸ்ஸானோவால் கல்லில் செதுக்கப்பட்ட "கிறிஸ்து பிறப்பு" குடிலானது அழகுற அமைந்துள்ளது. இச்சிற்பத்தில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வோடு, மதேரா நகரிலுள்ள முக்கிய இடங்களும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.





வலதுபுறத் தாழ்வாரத்தில் அமைந்துள்ள பலிப்பீடங்களில், முதல் பீடத்தில் புனிதர்கள் இலாரியோ மற்றும் மதேரா நகர் யோவான் புடைசூழ இருக்கும் அருள்மாதாவின் (Madonna delle Grazie) திருஓவியமானது நிறுவப்பட்டுள்ளது. சிங்கங்களின் கதவு அமைந்துள்ள பகுதியில் கி.பி. 1652ஆம் ஆண்டு கார்லோ ரோசா என்கிற ஓவியரால் வரையப்பட்ட புனித கயதானோவின் ஓவியமானது உள்ளது. மூன்றாவது பீடத்தில் 16ஆம் நூற்றாண்டை சார்ந்த ஒரு பழமையான மரத்தாலான திருச்சிலுவையானது மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதி பீடத்தில் விதோ அந்தோணியோ கன்வெர்சி என்பவரால் வரையப்பட்ட பல புனிதர்களின் அற்புதமான ஓவியங்களின் தொகுப்பு நிறுவப்பட்டுள்ளது.

இறுதியாக, ஆலயத்தின் நுழைவு வாயிலருகே 13ம் நூற்றாண்டை சார்ந்த ஒரு அற்புதமான சுவரோவியம் உள்ளது. இதுதான், புருனோ அன்னையின் திருஓவியத்தை தவிர, இந்த ஆலயம் கட்டப்பட்ட காலங்களில் வரையப்பட்ட ஓவியமாக இந்த ஆண்டவரின் அருள்தரும் ஆலயத்தை அலங்கரிக்கும் பழமையான பொக்கிசமாக உள்ளது. தராந்தோ நகர் ரினால்தோவால் வரையப்பட்ட இந்த ஓவியம், "இறுதி தீர்வை" நிகழ்வை விளக்குவதாக அமைந்துள்ளது. ஆலயத்தில் நுழைகிற எவரும் இறுதி தீர்வை நாளில் ஆண்டவரை எதிர்கொள்ள, அவரில் தஞ்சம் அடைவதை தவிர வேறு வழியில்லை என்று குறிப்பதாக இது அமைந்துள்ளது என்று கொள்ளலாம்.

தெற்கு இத்தாலியின் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மதேரா நகர் புருனா திருத்தலத்திற்கு, கி.கி 1991ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேதி திருப்பயணம் மேற்கொண்டார். கி.பி. 2006ஆம் ஆலயத்தின் புணரமைப்ப பணிகள் தொடங்கி, புதுப்பிக்கப்பட்ட ஆலயமானது கி.பி. 2016ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள், கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்களால் அர்ச்சித்து, புனிதப்படுத்தப்பட்டது.


காலங்கள் கடந்தாலும், கலாச்சாரங்கள் மாறினாலும், கரை படிந்த மனித உள்ளத்திற்கு கலங்கரை விளக்காய் அமைந்திருப்பவர் அன்னை மரியே. அவரின் பரிந்துரை செபங்களில் நம்பிக்கை கொள்வோம். அவர் கரம் பற்றி ஆண்டவர் அருளும் மீட்பைக் கண்டுணர்வோம்.

திருப்பயணம் தொடரும்.....

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

எசாயா: 34 முதல் 50 வரை





வலமிருந்து இடம்

2. _____என்று உங்களைப் பற்றிச் சொல்லிக் கொள்கின்றீர்கள் இஸ்ரயேலின் கடவுளையே சார்ந்து நிற்கின்றீர்கள் "படைகளின் ஆண்டவர்" என்பது அவர்தம் பெயராம்.

6. ஆண்டவர் தம் எதன் பொருட்டுத் தம் திருச்சட்டத்தைச் சிறப்பித்து மேன்மைபடுத்த ஆர்வமுற்றார்?

7. அது வளமாய்ப் பூத்துக் குலுங்கி மகிழ்ந்து பாடிக் களிப்படையும் லெபனோனின் எது அதற்கு அளிக்கப்படும்?

இடமிருந்து வலம்

1. உன் வழிமரபினர் எதன் அளவாயும், உன் வழித்தோன்றல்கள் கதிர்மணிகள் போன்றும் இருந்திருப்பர்? அவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிரார் அவர்கள் பெயர் என் திருமுன்னின்று அழிக்கப்பட்டிராது.

3. சிறைப்பட்டோரிடம், "புறப்படுங்கள் என்றும் இருளில் இருப்போரிடம் "வெளிப்படுங்கள்" என்றும் சொல்வீர்கள். பாதையில் அவர்களுக்கு மேய்ச்சல் கிடைக்கும் வறண்ட அனைத்திலும் பசும்புல் வெளிகளைக் காண்பர்.

4. அப்போது, ஆண்டவர் தம் ஆற்றலால் இதைச் செய்தார் என்றும்

இஸ்ரயேலின் தூயவர் அதைப் படைத்தார் என்றும் மக்கள் கண்டு_____ கொள்வர் ஒருங்கே சிந்தித்துப் புரிந்துகொள்வர்.

5. யாக்கோபே, உன்னைப் படைத்தவரும் இஸ்ரயலே, உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் இப்போது இவ்வாறு கூறுகிறார் அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன் உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்கு ”””..

8. நலிந்தவனை_____ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பதுபோல் நானும் செவிகொடுக்கச்செய்கின்றார்.

9. நான் உன்னைப் _____ஆனால், வெள்ளியைப் போலல்ல துன்பம் எனும் உலை வழியாய் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்.

11. என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் உன்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம்_____ தூணியில் என்னை மறைத்துக் கொண்டார்.

12. என் வெற்றியை அருகில் வரவழைத்துள்ளேன் அது தொலையில் இல்லை, என் விடுதலை காலம் தாழ்த்தாது சீயோனுக்கு நான் விடுதலை வழங்குகின்றேன் இஸ்ரயேலில் என் நிலைக்கச் செய்வேன்.

14. ”உரக்கக் கூறு” என்றது ஒரு குரல் ”எதை நான் உரக்கக் கூறவேண்டும்?” என்றேன்.” அனைவரும் புல்லே ஆவர் அவர்களின் மேன்மை வயல்வெளிப் பூவே

மேலிருந்து கீழ்

7. அவர் அரண்மனை மேற்பார்வையாளர் எலியாக்கிமையும், எழுத்தர் செபுனாவையும் குருக்களுள் முதியோரையும் சாக்கு உடை போர்த்தியவர்களாய் ஆமோட்சின் மகன் ”’. இறைவாக்கினரிடம் அனுப்பி வைத்தார்.

8. ”நீங்கள் என் சாட்சிகள்” என்கிறார் ஆண்டவர். “நான் தேர்ந்தெடுத்த என் ஊழியனும் நீங்களே என்னை அறிந்து என்மீது_____வைப்பீர்கள் “நானே அவர்“ என்பதை உணர்ந்து கொள்வீர்கள் எனக்கு முன் எந்தத் தெய்வமும் உருவாக்கப்படவில்லை எனக்குப் பின் எதுவும் இருப்பதில்லை.

10. ஆண்டவர் திருப்பொழிவு செய்துள்ளார் பிற இனத்தாரை அவர்முன் அடிபணியச் செய்வார் அரசர்களை அவர்முன் ஆற்றல் இழக்கச் செய்வார் கோட்டை வாயில்களை அவர்முன் பூட்டியிராது திறந்திருக்கச் செய்வார் அவரது வலக்கையை உறுதியாகப் பற்றிப் பிடித்துள்ளார் அவரிடம் ஆண்டவர் கூறுவது இதுவே

11. எலியாக்கிம், செபுனா, யோவாகு ஆகியோர் இரப்சாக்கேயை நோக்கி, "உம் பணியாளர்களான எங்களோடு தயைகூர்ந்து மொழியில் பேசும் நாங்கள் புரிந்துகொள்வோம், எங்களிடம் யூதா நாட்டு மொழியில் பேசாதீர், சுவர்மேல் இருக்கும் ஆள்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்றனர்.

14. ஆண்டவரே, நான் உம் திருமுன் உண்மை வழியில்_____மனத்துடன் நடந்து வந்ததையும் உம் பார்வைக்கு நலமானவற்றைச் செய்ததையும் நினைத்தருளும்" என்று கூறிக் கண்ணீர் சிந்தித் தேம்பித் தேம்பி அழுதார்.

கீழிருந்து மேல்

1. என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன்_____நான் உன்மேல் அன்பு கூர்கிறேன். ஆதலால் உனக்குப் பதிலாக மானிடரையும் உன் உயிருக்கு மாற்றாக மக்களினங்களையும் கொடுக்கிறேன்.

2. தளர்ந்துபோன கைகளைத்_____தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்.

5."ஆண்டவர் நம்மை விடுவிப்பது_____இந்நகர் அசீரிய மன்னன் கையில் ஒப்படைக்கப்படாது" என்று சொல்லி ஆண்டவர் மேல் நம்பிக்கை கொள்ளுமாறு உங்களை அவன் தூண்டுவான் அதற்கு இடம் கொடாதீர்கள்.

6. நான் கிணறு வெட்டி அதன் நீரைப் பருகினேன் என் காலடியால் எகிப்தின் எவை அனைத்தையும் வற்றிப்போகச் செய்தேன?" என்று சொன்னாய்.

9. ஆண்டவரின் ஆவி இறங்கி வரவே, உலர்ந்து போம் பூ வதங்கிவிழும் நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்.

13. என் ஊழியன் சொன்ன வார்த்தையை உறுதிப்படுத்துகின்றேன் என் அறிவித்த திட்டத்தை நிறைவேற்றுகின்றேன் எருசலேமை நோக்கி, "நீ குடியமர்த்தப் பெறுவாய்" என்றும் யூதா நகர்களிடம், "நீங்கள் கட்டியெழுப்பப் பெறுவீர்கள்" என்றும் அவற்றின் "பாழடைந்த இடங்களைச் சீரமைப்பேன்" என்றும் கூறுகின்றேன்.

தயாரிப்பு : த.எட்மன், OSSM, திருச்சி-21 (அலைபேசி எண்: 94436 72226)
விடைகள் அனுப்ப இறுதிநாள் 25-07-2026
முகவரி :
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி,
பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்",
ஜோதிமாதா ஆலயம்,
ராஜீவ்காந்தி சாலை,
ஓக்கியம்பேட்டை,
சென்னை - 600097.

ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருட்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
புனித அந்தோனியார் ஆலயம் விளாங்காட்டூர்

பொதுக்காலம் 20 ஆம் ஞாயிறு
16 - 08 -2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, பொதுக்காலம் இருபதாம் ஞாயிற்றுக் கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது நம் அனைவரையும் நம் இறை நம்பிக்கையினால் கடவுளிடம் விடாப்பிடியாக மன்றாட அழைப்பு விடுக்கின்றது. தொடக்க நூல் புத்தகத்தில் ஆபிரகாம் சோதோம், கொமோரா நகரங்களுக்காக இறைவனிடம் அடம்பிடித்து மன்றாடினார். அவருடைய மன்றாட்டுக்கு கடவுள் செவிகொடுத்து அந்நகரங்கள் மீது இரக்கம் காட்டினார். யாக்கோபு கடவுள் தன்னை ஆசீர்வதித்தால்தான் அவரைப் போக விடுவேன் என்று விடாப்பிடியாக வேண்டியபோது கடவுள் அவரை நிறைவாக ஆசீர்வதித்தார். இன்றைய நற்செய்தியில் கானானியப் பெண் தன்னுடைய மகளை இயேசு தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்து குணப்படுத்த வேண்டும் என்று மன்றாடுகின்றார். இயேசு கண்டுகொள்ளாத போதிலும் தொடர்ந்து விடாப்பிடியாக அவரிடம் கெஞ்சுகின்றார் அப்பெண். அவருடைய ஆழ்ந்த நம்பிக்கையையும், விடா முயற்சியையும் கண்ட ஆண்டவர் இயேசு அப்பெண்ணின் மகளை தீய ஆவியிடமிருந்து விடுவிக்கின்றார். அதோடு அந்த கானானியப் பெண்ணை "நீ பேறுபெற்றவள்" என்று ஆசீர்வதிக்கின்றார். நாமும் அப்பெண்ணைப் போல ஆழ்ந்த நம்பிக்கையோடும், விடா முயற்சியோடும் தொடர்ந்து இறைவனிடத்தில் மன்றாடுகின்றபோது இறைவன் நம்முடைய தேவைகளையும் நிறைவேற்றி நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பார். எனவே, நம்முடைய அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆழ்ந்த நம்பிக்கையோடு இறைவன் நம்மை ஆசீர்வதிக்கும் வரை, நம்முடைய தேவைகளை நிறைவேற்றும் வரை அவரை சிக்கெனப் பிடித்து அவரிடம் மன்றாடுகின்ற மனநிலையை இறைவன் நமக்குத் தரும்படியாக ஜெபித்து இக்கல்வாரித் திருப்பலியை நாம் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போம்.

முதல் வாசக முன்னுரை

நீதியை நிலைநாட்டி, நேர்மையைக் கடைப்பிடித்து இறைவனுக்கு பணிவிடை செய்பவர்களை கடவுள் தம்முடைய இல்லத்தில் என்றென்றும் அகமகிழச் செய்வார். அவர்கள் வேற்று இனத்து மக்களாக இருந்தாலும் அவர்கள் தமது உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இருந்தால் அவர்களை கடவுள் நிறைவாக

ஆசீர்வதிப்பார் என்று எடுத்துச்சொல்லும் இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைக்குச் செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

மனிதன் தம்முடைய கீழ்ப்படியாமையால் இழந்த அருளை தமது கீழ்ப்படிதலால் மீண்டும் பெற்றுக்கொள்வான். கடவுளுக்கு கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையின்படி வாழ்பவர்களுக்கு அவர் தமது இரக்கத்தை நிறைவாகப் பொழிகின்றார். ஏனெனில் கடவுள் தாம் கொடுத்த வாக்குறுதியின்படி தாம் விடுத்த அழைப்பையும், கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெறுவதில்லை எனக் கூறும் தூய பவுலடியாரின் வார்த்தைக்கு செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

1. எங்கள் அன்பின் ஆண்டவரே, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தாங்கள் பெற்ற அழைத்தலுக்கேற்ப தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திருப்பணியை திறம்படச் செய்து திருஅவையின் வளர்ச்சிக்காக உழைத்திடும் நல்ல உள்ளத்தை அருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. என்றும் வாழும் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும், எங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் ஆழ்ந்த இறை நம்பிக்கையோடு வாழவும், நாங்கள் வேண்டுகின்ற மன்றாட்டுக்கள் நிறைவேறும் வரை எங்கள் இறைநம்பிக்கையில் உறுதியோடு நிலைத்து நிற்கவும் கானானியப் பெண்ணைப்போல இடைவிடாது மன்றாடும் மனநிலை கொண்டவர்களாக வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் பங்கிலுள்ள இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் உலக மாயையில் சிக்கிக்கொள்ளாமல் இறை நம்பிக்கையிலும், தெய்வ பயத்திலும், நல்ல ஒழுக்கத்திலும் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து தங்கள் வாழ்க்கையை உம்முடைய விருப்பத்தின்படி வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் ஆண்டவரே, உம்மீது நம்பிக்கை இல்லாதவர்களுக்காகவும், தாங்கள் வேண்டியது எதிர்பார்த்ததுபோல் கிடைக்காத காரணத்தினால் உம்மை விட்டு விலகிச் சென்றவர்களையும் ஆசீர்வதியும். அவர்கள் மீண்டும் இறைநம்பிக்கையோடு உம்மிடம் திரும்பி வரவும், தாங்கள் இழந்து போன அருள்வரங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் செய்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா, எம் நாட்டையும், இவ்வுலகையும் ஆளும் தலைவர்களை ஆசீர்வதியும். அவர்கள் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு சமூக வளர்ச்சிக்காகவும், உலகில் அமைதியை நிலைநாட்டவும் உழைத்திட உமது அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு
23 - 08 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, ஆண்டின் பொதுக்காலத்தின் 21ம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது இறைவனை நாம் முழுமையாய் அறிந்துகொண்டு, இறைவன்தான் நம்முடைய வாழ்க்கையில் நமக்கு எல்லாம் என்ற மனநிலையோடு அவரை முழுமையாகப் பற்றிக்கொண்டு வாழ நமக்கு அழைப்புக் கொடுக்கின்றது. யூதர்கள் ஆண்டவர் இயேசுவை யார் என அறிந்து கொள்ளவில்லை. அவரை, திருமுழுக்கு யோவான் எனவும், இறைவாக்கினர்களில் ஒருவராக இருப்பார் எனவும் நினைத்தார்கள். ஆண்டவர் இயேசு பல அரும் அடையாளங்களையும், வல்ல செயல்களையும் செய்தபோதும் அவர்கள் இயேசுதான் மீட்பர் என்பதை புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இயேசுவோடு வாழ்ந்த பேதுரு இயேசுவை யார் என அறிந்து வைத்திருந்தார். அதனால்தான் இயேசு, "நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" எனக் கேட்டபொழுது பேதுரு, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என உரத்த குரலில் கூறினார். இயேசுவும் மகிழ்ச்சியோடு அவரை திருஅவையின் தலைவராக உயர்த்தி அவரை ஆசீர்வதித்தார் என்று நற்செய்தியானது சுட்டிக்காட்டுகின்றது. நாமும் பேதுருவைப்போன்று ஆண்டவர் இயேசுவை முழுமையாக அறிந்து கொண்டு அவர்தான் உண்மையான கடவுள் என்றும், மெசியா என்றும் அறிக்கையிடுகின்றபோது நாமும் நிறைவாக ஆசீர்வதிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையின் செய்தி நமக்கு வழங்கப்படுகின்றது. எனவே நாம் நம் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்க்கையில் இறைவார்த்தையை வாசிப்பதன் வழியாகவும், ஆலயத்தில் நடைபெறுகின்ற வழிபாடுகளில் முழுமையான ஈடுபாட்டுடன் கலந்துகொள்வதன் வழியாகவும் நம்முடைய கடவுளை முழுமையாக அறிந்து கொண்டு, தெரிந்து கொண்டு அவரிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ முயற்சி செய்வோம். அதற்கான அருள்வரத்தை வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு ஜெபிப்போம்.

முதல் வாசக முன்னுரை

கடவுளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வோரையும், கீழ்ப்படியாமல் தலைக்கணத்தோடு வாழ்வோரையும் அவர் அரியணையிலிருந்து தூக்கி எறிகின்றார் என்றும் தன்னுடைய விருப்பத்தின்படி கீழ்ப்படிதலான வாழ்க்கை வாழ்வோரை உயர்த்துகின்றார், அரியணையில் அமரச் செய்கின்றார் என்றும் இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துச் சொல்கின்றது. நாம் கடவுளுக்கு பணிந்து கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ வேண்டிய வரத்தை இறைவன் நமக்கு அருள வேணடுமென ஜெபித்தவர்களாக இந்த வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

கடவுளின் ஞானமும், செயல்முறையும், அவர் வழங்குகின்ற தீர்ப்பும் நம்முடைய மனித ஞானத்திற்கு அப்பாற்பட்டது. கடவுளை முழுமையாக அறிந்துகொள்வது என்பது இயலாத காரியம். இருந்தாலும் நம்முடைய நம்பிக்கையினாலும், கடவுளுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதனாலும் நாம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழ முடியும் என்றும், அப்படி வாழும்போது

அவருடைய அருள்வரம் நமக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்றும் எடுத்துச் சொல்லும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிகொடுத்து அதை வாழ்வாக்க முயற்சி செய்வோம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

1. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைவார்த்தை வழியாக உம்மை அறிந்து கொண்டு, தாங்கள் அறிந்து கொண்ட கிறிஸ்துவை தங்களுடைய பணிவாழ்வாலும், செயலாலும் அறிவிக்கின்ற கருவிகளாகத் திகழ்ந்து அனைத்து இறைமக்களுக்கும் எடுத்துக்காட்டான வாழ்வு வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, திருமுழுக்கின் வழியாக கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்ற நாங்கள் அனைவரும் எங்கள் மீட்பராகிய கிறிஸ்துவை இறைவார்த்தையின் வழியாக நாளுக்கு நாள் அறிந்து தெரிந்துகொள்ளவும், அவரையே மீட்பராக ஏற்றுக்கொண்டு வாழவும் அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எங்கள் மீட்பராகிய இறைவா, எங்கள் குழந்தைகள் அனைவரும் சிறு வயதிதிலிருந்தே, இறைஞானத்திலும், தெய்வ பயத்திலும், நல்ல ஒழுக்கத்திலும் வளர்ந்து எதிர்காலத்தில் நல்ல கிறிஸ்தவர்களாக வாழக்கூடிய அருளைத்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் ஆண்டவரே, அன்பிற்காக ஏங்குவோரையும், தனிமையில் வாடுவோரையும், மற்றவர்களின் பராமரிப்பிற்காக தவிப்போரையும் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம். நீர்தாமே அவர்களுக்கு ஆறுதலாக இருந்து அவர்களின் தனிமையைப் போக்கும்படியாகவும், பல நல்ல உள்ளங்கள் வழியாக அவர்களை அன்பு செய்து பராமரிக்க வேண்டுமென்றும் ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. உண்மையான பரம்பொருளே எம் இறைவா, இதுவரை உம்மை அறிந்துகொள்ளாதவர்களுக்காகவும், உம்மீது நம்பிக்கை இல்லாதவர்களுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் மீது நீர் இரக்கமும் பரிவும் கொண்டு அவர்கள் உம்மை உண்மையான கடவுள் என்று அறிந்து ஏற்றுக்கொண்டு உம்மீது நிலையான நம்பிக்கை வைத்து வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு
30 - 08 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, ஆண்டின் பொதுக்காலத்தின் 22ம் ஞாயிற்றுக்கிழமையான இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது நம் அனைவரையும் நம் வாழ்வில் வருகின்ற துன்பங்களை இறைவனின் திருவுளமாக ஏற்றுக்கொண்டு ஆண்டவர் இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ அழைப்பு விடுக்கின்றது. கடவுளுடைய எண்ணங்களும், திட்டங்களும், செயல்களும் மனிதனுடைய எண்ணங்கள், திட்டங்கள், செயல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. நம்முடைய வாழ்க்கையில் நடைபெறுகின்ற

மகழ்ச்சியான தருணங்களை, நிகழ்ச்சிகளை நாம் கடவுளின் விருப்பமாக, திட்டமாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நம் வாழ்க்கையில் துன்பம், தோல்வி, நெருக்கடி, இழப்பு வருகின்றபோது அவற்றை கடவுளின் திட்டமாக, விருப்பமாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். அச்சூழ்நிலையில் கடவுளுக்கு எதிராக முணுமுணுக்கின்றோம். நம்முடைய வாழ்வில் வருகின்ற எல்லாத் துன்பங்களையும் நாம் மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றபோது அத்துன்பங்கள் வழியாக கடவுள் நமக்கு மகிழ்ச்சியையும் மாட்சியையும் தருவார். கடவுளுக்காக எல்லாவிதமான துன்பங்களையும் மனமுவந்து ஏற்றுக்கொள்வோரும், துன்பங்களின் மத்தியில் கடவுளைப் புகழ்ந்து வாழ்வோரும் மட்டுமே கடவுளுக்கு ஏற்ற சீடர்களாக இருக்க முடியும். எனவே இன்றைய இறைவார்த்தை நமக்குத் தருகின்ற அழைப்பை ஏற்று துன்ப துயரங்களை கடவுளின் திருவுளமாக ஏற்று அத்துன்பங்கள் வழியாக கடவுள் நம்மை புடமிட்டு மகிமைப்படுத்துவார் என்ற நம்பிக்கையில் நாம் இறை இயேசுவின் அன்புச் சீடர்களாக வரம் வேண்டி இத்தியாகத் திருப்பலியில் இணைவோம் பக்தியோடு.

முதல் வாசக முன்னுரை

இறைவார்த்தையை அறிவிப்பதன் பொருட்டு மனிதர்களின் நகைப்புக்கும், ஏளனத்துக்கும் ஆளானார் இறைவாக்கினர் எரேமியா. இறைநம்பிக்கை இல்லாத மனிதர்கள் இறைவாக்கினரை பலவாறு துன்புறுத்தினார்கள். ஆனால் கடவுள் இறைவாக்கினரை கைவிடவில்லை. எனவே, தம்மை கைவிடாமல் எல்லாச் சூழ்நிலையிலும் தம்மோடு இருந்து பாதுகாத்த கடவுளை "எல்லாம் வல்லவர்" என்று இறைவாக்கினர் புகழுகின்ற இறைவார்த்தைக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

நாம் அனைவரும் இந்த உலகம் காட்டுகின்ற வழியில் செல்லாமல் இறைவனின் திட்டத்தை தேர்ந்து தெளிந்து அறிந்தவர்களாக புதுப்பிக்கப்பட்ட மனிதர்களாக மாற வேண்டுமென்றும், நம்மையே கடவுளுக்கு ஏற்ற தூய பலியாக படைக்க வேண்டுமென்றும் அழைப்புவிடுக்கின்ற தூய பவுலடியாரின் பரிவுமிக்க வார்த்தைக்கு செவிகொடுத்து இறைத் திருவுளத்தை ஏற்க முயற்சி செய்வோம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா, நிர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் அவர்களுக்காக நீர் கொண்டுள்ள திருவுளத்தை அறிந்து ஏற்றுக்கொண்டு அதன்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளவும், உம்முடைய திட்டத்திற்கேற்ப உம்முடைய மக்களை வழிநடத்தவும் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் அன்றாட வாழ்வில் வருகின்ற எல்லா துன்ப துயரங்களையும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, துன்பத்தின் மத்தியில் உம்மைப் புகழ்ந்து வாழவும், உம்முடைய அன்புச் சீடர்களாகத் திகழவும் அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான எம் இறைவா, எங்கள் பங்கில் வாழுகின்ற அனைத்து நோயாளிகளுக்காகவும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களைத் தொட்டு குணப்படுத்தி அவர்கள் இழந்து தவிக்கும் மகிழ்ச்சியை மீண்டும் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. விடுதலையின் நாயகனே எம் இறைவா, கடன்சுமை, பொருளாதார நெருக்கடி, குடும்ப பிரச்சினைகளின் மத்தியில் வாழும் அனைவருக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். உம்முடைய அருளினாலும், இரக்கத்தினாலும் அவர்களுடைய எல்லாவிதமான சுமைகளிலிருந்தும், நெருக்கடியிலிருந்தும் அவர்களுக்கு விடுதலையளித்து மகிழ்ச்சியான வாழ்வைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. இரக்கமே நிறைந்த எம் இறைவா, உலக ஆடம்பரத்திலும், இன்பத்திலும் சிக்கி இறைநம்பிக்கையை இழந்து வழி தவறிச் சென்றவர்களுக்காக உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவரும் உமது அளப்பரிய இரக்கத்தினால் மனமாற்றம் அடைந்து இறைநம்பிக்கையின் வழியில் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளவும், தங்களையே உமக்கு அர்ப்பணித்து வாழவும் அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு

06 - 09 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது, காயப்பட்ட உறவுகளுக்கு மருந்துபோடவும், உடைந்துபோன உறவுகளை ஒன்றுபடுத்தி ஒற்றுமையோடு வாழவும் நமக்கு அழைப்புவிடுக்கின்றது. நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் நம்முடைய உறவுகளைக் காயப்படுத்துகின்றபொழுது, நம்முடைய உறவுகளால் நாம் காயப்படுகின்றபொழுது ஒருவர் மற்றவரை மன்னித்து நம் உறவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று ஆண்டவர் நமக்கு அழைப்புவிடுக்கின்றார். கடவுள் நமக்கு கொடுத்திருக்கின்ற ஆசீர்வாதங்களில் சிறந்த ஆசீர்வாதம் நம்முடைய உறவுகள். உறவுகளோடு ஒருமனப்பட்டு ஒற்றுமையாக வாழும் மனிதர்கள் மத்தியில் இறைவன் பிரசன்னமாக இருக்கின்றார். அதேநேரத்தில் நம்முடைய உறவினரோ, நண்பரோ தவறு செய்கின்றபோது, இறைநம்பிக்கைக்கு எதிராக வாழும்போது அவர்களை கண்டித்துத் திருத்துகின்ற பொருப்பும் கடமையும் நமக்கு இருக்கின்றது என்பதையும் இன்றைய இறைவார்த்தை நமக்கு சுட்டிக்காட்டுகின்றது. தவறு செய்பவர்களுக்கு தீர்ப்பிடாமல் அவர்களை அன்போடு திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும். எனவே, இறைவன் இன்று நமக்கு கொடுக்கின்ற அழைப்பை ஏற்றுக்கொண்டு நம்முடைய உறவுகள் நமக்கு எதிராக செய்கின்ற தவறுகளை மன்னித்து அவர்களை பரிவோடும், அன்போடும் திருத்தி நம்முடைய உறவுகளோடு ஒற்றுமையாய் வாழ்ந்து இறைவனுடைய உடனிருப்பையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும் பெற்று நம்மைப் படைத்த இறைவனின் அன்பு மக்களாக வாழ வரம் வேண்டி ஜெபித்தவர்களாக இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.



முதல் வாசக முன்னுரை

தவறு செய்பவர்களையும், பாவிகளையும் அன்போடு கண்டித்து திருத்துவது ஒவ்வொரு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் கடமை. அவர்களைத் திருத்தும்பொழுது அவர்கள்பொருட்டு கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார் என்றும், அவர்களை திருத்த நாம் முயற்சி செய்யவில்லை என்றால் அவர்களின் பாவத்தின் பொருட்டு நம்மை தண்டிப்பார் என்றும் எடுத்துச் சொல்லும் இறைவாக்கினர் எசேக்கியேலின் வார்த்தைக்குச் செவிகொடுத்து பாவிகளை அன்போடு திருத்த முயற்சி செய்வோம்.

இரண்டாம் வாசக முன்னுரை

அன்பு எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும். அன்பு யாருக்கும் எந்த தீமையும் செய்யாது. அன்பு செய்வோர் கடவுளின் கட்டளைகளை பின்பற்றுபவர்களாகிறார்கள் என்றும் அன்பு செய்வதில் மட்டும் ஒருவர் மற்றவருக்கு கடன்பட்டிருங்கள் என்றும் வலியுறுத்தும் தூய பவுலடியாரின் குரலுக்கு செவிகொடுத்து எல்லாரையும் அன்பு செய்யும் மக்களாக மாற வரம்வேண்டுவோம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் பொறுப்பிலிருக்கின்ற திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தங்களுடைய பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து தங்களுடைய செயலாலும், போதனையாலும் பாவிகளை மனமாற்றுகின்ற அன்பின் பணியாளர்களாக வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகினறோம்.

2. அருளின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் நீர் எங்களுக்கு கொடுத்துள்ள உறவுகளோடு இணைந்து வாழவும், நாங்கள் காயப்படுத்தியவர்களிடம் மன்னிப்புப் பெற்றும், எங்களைக் காயப்படுத்தியவர்களை மன்னித்தும் வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள் பழிவாங்கும் எண்ணத்துடன் நடக்காமல், நாட்டின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நலனுக்காகாவும் உழைத்திடும் நல்ல மனநிலையுடன் வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றுோம்.

4. ஒற்றுமையின் இறைவா, எங்கள் பங்கிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் ஒற்றுமையோடு வாழச் செய்தருளும். குறிப்பாக, பிரிந்து வாழுகின்ற குடும்பங்கள் உறவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, செய்த தவறுகளை மறந்து மீண்டும் இணைந்து ஒற்றுமையோடு மகிழ்ச்சியின் குடும்பமாக வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. அன்பின் இறைவா, திருமணத் தயாரிப்பு வகுப்புகளையும், குடும்பநல ஆலோசணை வழங்குபவர்களையும் ஆசீர்வதியும். அவர்கள் செய்கின்ற இந்த அரும்பணியின் வழியாக ஒற்றுமையும், மகிழ்ச்சியும், இறைநம்பிக்கையும் நிறைந்த கத்தோலிக்க குடும்பங்களை உருவாக்க வேண்டுமென்றும், இப்பணியாளர்கள் தங்கள் பணியை திறம்படச் செய்ய தேவையான ஞானத்தையும் அருள வேண்டுமென்றும் ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி **டெக்லாமோரி** ம.ஊ.ச
செர்வைட் தலைமையகம், சென்னை.

பயணம் பன்னிரெண்டு

தொடக்கவுரை

பயணம் ஒன்றாய்ப் போகிறோம்
பாதை முழுதும் கீதங்கள்
தலைவன் இயேசு வழியிலே
தலை நிமிர்ந்து நடக்கின்றோம்".

அன்னை மரியா, கல்வாரிக்குச் சிலுவை சுமந்து சென்ற மகனுடன் தலை நிமிர்ந்து நடந்தார். நமது தாய்மார்களைப் போன்று ஒப்பாரி வைக்கவில்லை. நன்றி கெட்ட மனிதர்கள் நடுவில் வீரமுடன் சென்றார். ஆழ்ந்த அமைதியில், வைரம் பாய்ந்த நெஞ்சுடன் இயேசுவின் தாயாக மட்டுமல்ல, இயேசுவின் சீடத்தியாக, மீட்பின் அன்னையாகச் சென்றார். கல்வாரியை அடைந்ததும் நம்மைப் படைத்த இறைவனை அவமானத்திற்கு உள்ளாக்குகிறோம் என்ற நினைவே இல்லாமல் ஆடைகளைக் களைவதும், சிலுவையில் அறைவதும் எசாயா முன்னுரைத்த துன்புறும் ஊழியரைக் காட்டுகிறது. காண்போர் கண்ணை மறைக்கும் கோலம். பெற்ற தாய்க்கு இருக்கும் வேதனையை விவரிக்க முடியாது. கரங்களிலும் கால்களிலும் ஆணிகளை அறையும்போது, யோவானின் தோளில் தன் முகத்தைப் புதைத்துக் கொள்ளும் சிலுவைப்பாதை படங்கள் இருக்கின்றன. இரத்தம் பீறிட்டு ஓட, தாய் துடி துடிக்கிறார். தனது இரத்தம் அல்லவா? பாலூட்டி, அமுதுட்டி, ஆசையாய், அன்பாய் வளர்த்த மகனின் பாடுகள் அன்னையின் வேதனைகளை அதிகரிக்கின்றன. விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே மூன்று மணி நேரம் ஊசலாடுகிறார் தெய்வ மைந்தன். மனிதவர்க்கத்தின் மனக் கடினமும் விண்ணகத் தந்தையின் பாரா முகமும் ஒரு சேர உள்ளத்தைப் பிளக்க "பிதாவே ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்" எனக் கூறி நிற்கும் திருமகனின் சிலுவையடியில் நெருங்கி நிற்கின்றார் அன்னைமரி. இதோ யோவான் வழியாக தம் தாயாம் வியாகுலத் தாயை, அன்னையாக ஈந்து, பாவம்நிறை மனுக்குலத்தை மக்களாகப் பெற்றெடுக்கும் இந்த சோகக் கட்டத்தில் அன்புள்ள தன் தேவமகன் ஆவி விடக் கண்டு அசைவற்று நிற்கிறார் நம் வியாகுலத்தாய். ஐந்தாம் வியாகுல வாள் அன்னையின் இதயத்தை ஊடுருவுகிறது. சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட அன்பு மகனை அருமைத் தாய் தனது மடியில் சுமக்கிறார். ஆறாவது வியாகுல வாள் இதயத்தை ஊடுருவுகிறது. மடியில் சுமந்தபின் மரியாவின் பன்னிரெண்டாவது பயணம் கல்லறையை நோக்கிப் புறப்படுகிறது. பெற்ற தாய்க்கு இறுதிச்சடங்கினை செய்வார் மகன். இன்று தனது மகனுக்குப் பிரியாவிடை கொடுக்க மௌனமாகக் கல்லறைக்குச் செல்லும் சிறு குழுவில் மரியா தன்னை இணைத்துக் கொள்கிறார். கல்லறையில் வைத்தபின் சிலுவையடியில் தன்னைத் தாயாக ஏற்ற அன்புச் சீடர் யோவானின் இல்லத்திற்குப் பயணிக்கின்றார். இவ்விரண்டு பயணங்களையும் இக்கட்டுரையில் சற்று ஆழ்ந்து சிந்திப்போம்.

கல்லறையை நோக்கிப் பயணிக்கும் மரியா

இறந்த மகனை மடிமீது சாய்த்ததும், மரியா மனதால் பெத்லகேம் குடிலுக்குச் சென்றார். அழகிய பிஞ்சுக் கரங்களுடன், நட்சத்திரப் புன்னகையுடன், பால் மணம் மாறா சம்மனசு போன்ற முகத்துடன் தீவனத் தொட்டியில் கண்ட காட்சிகள் மனதில் தோன்றி மறைகின்றன. நாசரேத்தில் சிறுவன் இயேசு ஓடியாடி விளையாடுவதை நினைத்துப் பார்த்தார். தூய வளனாருக்குப் பக்கபலமாக நின்று தொழில் பட்டறையில் செய்த உதவிகள் அவர் கண்முன்பாக நிழலாடின. "இதோ உமது அடிமை" என்ற வாக்குறுதியைப் புதுப்பித்துக் கொண்டவராய் மகனின் காயங்களை உற்றுப் பார்க்கின்றார். "அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம்" என்ற இறைவாக்கை நினைவுகூர்ந்தார். அவரது கண்ணீர்த் துளிகள் அந்தக் காயங்களின் மீது விழுகின்றன. சிமியோன் முன்னறிவித்த வாள் ஆறாவது வியாகுலமாக அவரது இதயத்தை ஊடுருவிப் பாய்கின்றது. அன்று அன்பு மகனை சுமந்த தாய், இன்று இந்த துன்புறும் உலகை மடி சுமந்தவராய் இருக்கின்றார். மாலை நேரம் நெருங்க மனமுவந்து கல்லறையில் தன் மகனை வைக்க இசைவு தருகிறார் அன்னை. இயேசுவின் நெருங்கிய ஆண்-பெண் சீடர்கள் அவரது உடலை சுத்தம் செய்து நறுமணம் வீசும் தைலங்களால் பூசுகின்றனர். அன்னையின் இறுதி முத்தத்துடன் மகனின் உடல் வெள்ளைத் துணிகளால் சுற்றப்படுகின்றன. இறைவனின் இறுதி ஊர்வலம் புறப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக ஓயாது உழைத்த இறைமகனை சுமந்து செல்கின்றனர். நமது பிணிகளையெல்லாம் சுமந்த அவரை சுமந்து செல்கின்றனர். சிலுவை சுமந்து எருசலேம் வீதிகளில் மேற்கொண்ட பயணம், மகன் வாங்கிய அடிகள், பெற்ற சித்ரவதைகள் அனைத்தும் வியாகுலங்களால் அன்னையின் இதயத்தை ஊடுருவ, கல்லறையை நெருங்குகின்றார். யூத சமயத்தின் அனைத்து சடங்குகளையும் நிறைவேற்றியபின் துணிகளால் சுற்றப்பட்ட மகனின் உடலை மீண்டும் ஒருமுறை பார்த்தபின் ஒரு பெரிய கல் தாயையும் மகனையும் பிரிக்கிறது. ஆறு நாள்களில் உலகைப் படைத்து, பின் ஏழாம் நாள் கடவுள் இளைப்பாறியது போல், உலகின் மீட்பைத் தனது பாடுகளினாலும் மரணத்தினாலும் நிறைவேற்றிய பின் தனிமையில் தன் மகனை கல்லறைத் தாயின் உதரத்தில் வைத்தவாறு, மீண்டும் மீண்டும் அதைத் திரும்பிப் பார்த்தவாறே அடுத்த பயணத்தை ஆரம்பிக்கின்றார்.

அன்புச் சீடரின் இல்லத்திற்குப் பயணம்

கனத்த இதயத்துடன், ஆழ்ந்த சோகத்துடன் புனித வியாகுல அன்னை இயேசுவின் அன்புச் சீடர் யோவானைப் பின்செல்கின்றார். தனது மகனை யூத மரபுப்படி அடக்கம் செய்யப் பெரிதும் உதவிய நல்மனம் கொண்டவர்களுக்கு நன்றிகளை கண்ணீர் மல்க தெரிவிக்கின்றார். கல்லறையிலிருந்து எருசலேம் வழியை அடையும் வரை எங்கும் இயேசுவின் பாடுகள், மரணத்தின் ஒலியே கேட்டது. அன்பு மகனை மடியில் தலைசாய்த்து வைத்திருந்த இடத்தில் சற்று நேரம் நிற்கின்றார். உயிரற்ற மகனைத் தாங்கிய அந்த நேரம் புனிதமானது. இயேசுவின் திரு சிரசின் முள்முடியையும், ஆணிகளையும் பக்தியுடன் தன்னிடம் எடுத்துக் கொள்கிறார். பயணம் தொடர்கிறது. உலகை மீட்ட திருச்சிலுவை கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. விண்ணகத் தந்தையின் அன்புக் கரங்களில் தன் உயிரை கையளிக்குமுன் குரலெழுப்பிக் கூறிய பொன்னான வார்த்தைகள் அன்னையின் இதயத்தில் எதிரொலித்தது. "தாகமாக இருக்கிறேன்" என்று கூறிய மகனுக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுக்க ஒரு நல்ல மனிதர் இல்லாமல் போயிற்றே? தன் மகன் உயிர்விட்டதும் இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்ட நூற்றுவர் தலைவன் நிற்கின்றார். "இவர் உண்மையிலேயே இறைமகனாக இருந்தார்" என்று கூறியதை நினைவுகூர்ந்த மரியா, உளமார அவரை

நேசித்தவாரே கடந்து சென்றார். இயேசுவின் ஆடைகளைக் களைந்த இடம், அதன் மீது சீட்டுப் போட்டது எல்லாம் நினைவுக்கு வருகின்றன. தான் தையல் இல்லாமல் ஆசையுடன் மகனுக்குச் செய்து கொடுத்த ஆடைக்குக் கூட இந்த நிலையா? மரியாவின் பயணம் எருசலேம் வீதிகளைக் கடக்கின்றது. பச்சை மரத்திற்கே இப்படியென்றால் பட்ட மரத்திற்கு என்ன நேருமோ என்ற இயேசுவின் குரல் உள்ளத்தில் ஒலிக்கின்றது. எருசலேம் மக்களின் கண்ணீர் நிறைந்த பிரியாவிடையை நினைத்துப் பார்க்கின்றார். ஒரு சில பெண்கள் மரியாவுக்கு ஆறுதல் கூற வருகின்றனர். மௌனத்தால் அவர்களுக்கு நன்றி கூறி தூய யோவானின் இல்லத்தில் பயணம் நிறைவுற்றது.

கைவிடப்பட்ட மாமரி

ஆண்டுதோறும் நினைவுகூரப்படும் புனித வெள்ளி கிறிஸ்தவர்களுக்கு ஒரு சோகமான நாள் தான். இன்று தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டது போலவே நாம் உணர்கிறோம். உடல் ஒறுத்தலில், அமைதியில், இறை ஒன்றிப்பில் இந்த நாளை செலவிடுகிறோம். மரியா, யோவானின் இல்லத்தில் ஆழ்ந்த அமைதியில் உறைகின்றார். முதல் புனித வெள்ளி இரவு முழுவதும் கல்லறையில் துயில் கொள்ளும் இயேசுவில் ஒன்றித்திருந்தார். கல்வாரிப் பயணத்தின் ஒவ்வொரு நிகழ்வும் துன்ப அலையாக அவர் இதயத்தில் மோதிச் சென்றன. அன்புச் சீடரைப் பார்க்கும் போதெல்லாம் மூன்று ஆண்டுகள் தன் மகனை குருவாகவும் போதகராகவும் கொண்டிருந்த மற்ற சீடர்களையும் தேடினார். யோவானின் ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள் அன்னையைத் தேற்றினாலும் கல்வாரிக் காட்சிகள் அனைத்தும் சிமியோன் இறைவாக்கினர் உரைத்த வாட்களாக அவரது உள்ளத்தை ஊடுருவின. ஆம், இது வியாகுல அன்னையின் ஏழாவது வாள். பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் மெசியாவைப் பற்றி முன்னறிவித்தவை யாவும் நிறைவுறுவதைப் புரிந்து கொண்டார். இயேசுவை கல்லறையில் வைத்தபின் வியாகுல அன்னை தனிமையில் விடப்படுகிறார். அன்னையின் வியாகுலங்கள் மீது சிறப்பான வணக்கத்தைக் கொண்டிருக்கும் மரியின் ஊழியர்கள், அவரைக் "கைவிடப்பட்ட மாமரி" என்று அழைக்கின்றனர். ஆழ்ந்த தியானத்திலும் அமைதியிலும் அவரோடு இணைகின்றனர். ஆறுதல் கூறுகின்றனர். அன்னையின் புலம்பலைக் கேட்போம். என் மகனின் குரல் அடங்கிவிட்டது. தெருக்களிலும், கடற்கரை ஓரங்களிலும், மலைக் குன்றுகளிலும் இறையாட்சி பற்றி எடுத்துரைத்த போதனைகள், உவமைகள் அனைத்தும் மௌனித்து விட்டன. இனி எப்போது அந்த இறைக்குரலைக் கேட்பேன். ஊர்கள், நகர்கள்தோறும் தரை, கடல் வழியாகச் சென்று புதுமைகள் ஆற்றிய அவரது காலடி ஓசை நின்றுவிட்டது. உண்மை, நீதி, சமத்துவம் என்று இயேசு ஏழைகள், பெண்கள், பாவிகள் சார்பாக நிலைப்பாடு எடுத்தாரே. அவருக்கு இப்போது நீதி மறுக்கப்பட்டு விட்டதே. அரசியல், சமயத் தலைவர்களை நினைத்து வேதனைப்படுகிறார். இம்மக்கள் தாம் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். எனவே மன்னியும் என்று பெருந்தன்மையோடு தந்தையிடம் பரிந்துரை செய்த மகனின் மன்னிக்கும் பண்பினை நினைத்துப் பெருமிதம் அடைகின்றார். மூன்று ஆண்டு காலமாக எதிர்க்கப்படும் அறிகுறியாகவே வாழ்ந்து, மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருப்பார் என்ற இறைவாக்குகள் நிறைவேறுகின்றன. நடந்து முடிந்தவைகள் வெறும் நிகழ்வுகள் அல்ல. மாறாக, மீட்பின் வரலாறு நிறைவு பெற இவைகள் தேவையாக இருக்கின்றன. நானும் ஒரு கருவியாக செயல்பட இறைவன் இந்த வியாகுலங்கள் வழியாக அழைக்கின்றார் என்று முழுவதுமாக இறைத்திட்டத்திற்கு "ஆம்" என்ற உள்ளத்தில் ஓங்கிய குரலுடன்

பணிகின்றார் அன்னை. கல்லறை தன் மகனின் வாழ்வில் முடிவல்ல. தன் மகன் கூறியவாறு மூன்றாம் நாள் உயிர்ப்பார். சாவின் மீது வெற்றி கொள்வார். புது வாழ்வு பிறக்கும் என்று தனது நம்பிக்கையைப் புதுப்பிக்கின்றார்.

அன்னை தரும் செய்தி

இயேசுவைப் பின்செல்லும் அனைவரும் துன்பங்கள், வேதனைகள், சவால்களைச் சந்தித்தே ஆக வேண்டும். நன்மை மட்டுமே செய்த இயேசுவுக்கே இத்தனை நெருக்கடிகள், இடர்பாடுகள் என்றால் நாம் எம்மாத்திரம். எனவே நம்பிக்கையுடன் நமது வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம். சிலுவைகளைத் துணிவுடன் ஏற்போம். அப்போது நம் வாழ்வில் அமைதி பிறக்கும். "சிலுவைகள் தந்து நீ ஞானம் தந்தாய்" என்று மகிழ்ந்து பாடுவோம். இயேசுவுக்கு சாட்சி பகரும் வாழ்வும் நம்மில் வெளிப்படும். எனவே இயேசுவைப் போன்று பிறர் வாழ்வு பெற நமது துன்பங்கள் வழி நம்மையே இழப்போம்.

பிறருடைய துன்பத்திலும் பங்கு பெற நம் அன்னை நம்மை அழைக்கின்றார். பல வகைகளில் துன்புறுவோர் நம்மிடையே இருக்கின்றனர். நோய், வறுமை, கண்டுகொள்ளாமை, தனிமை போன்ற பல வகையான துன்பங்கள் இன்று அதிகரித்து வருகின்றன. தன் சொந்த வீட்டிலேயே அன்பற்ற சூழலில் அந்நியராய் நடத்தப்படுவோர் அநேகர். நமது பங்குகள், அன்பியங்களில் உள்ள இத்தகையோரைச் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலாக இருக்க வியாகுல அன்னை நம்மை அழைக்கிறார்.

நாம் ஒவ்வொருவருமே கல்வாரிப் பயணமும் கல்லறைப் பயணமும் அனுபவித்தே ஆக வேண்டும். ஏனெனில் இயேசுவின் பாடுகளில் குறைவுபட்டதை நாம் நிறைவு செய்ய வேண்டும் என்று பவுலடியார் நம்மை அழைக்கின்றார். எனவே நாம் மீட்பின் பலன்களை அனுபவிப்பவர்களாகவும், அதை முழுமையாய்ப் பெற துன்பங்களை அமைந்த மனதுடன் ஏற்க அன்னையின் வியாகுலங்கள் நமக்கு பெரிதும் துணையாய் இருக்கின்றன.

நிறைவுரை

புனித வியாகுல அன்னை, புனித யோவானின் இல்லத்திற்குச் சென்றது ஒரு உருவகமாக இருக்கிறது. இயேசு தம் அன்புத் தாயை புனித யோவானிடம் ஒப்படைத்தது பிறக்கவிருக்கும் திருஅவையின் அடையாளமாகும். எனவே மரியா தனது துன்பங்களைத் தியானித்த பின் இயேசுவின் உயிர்ப்பிற்குத் தன்னைக் கையளித்தார். இயேசு உயிர்ப்பார் என்ற எதிர்பார்ப்பில் மூழ்கினார். தூய ஆவியாரைப் பொழிந்து திருஅவை பிறக்கும் அந்த நாளுக்காக செபித்தார். சிதறிக்கிடந்த சீடர்களை ஒன்று சேர்க்க வேண்டும். இயேசு விட்டுச் சென்ற நற்செய்திப் பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும். இறைவனின் இத்திட்டத்தில் இன்னும் தனக்குரிய பங்கை சிந்திக்கத் தொடங்கினார். ஏனெனில் தம் வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் தன் உள்ளத்தில் பொக்கிஷமாய் பொதிந்து வைத்திருந்தவர் அல்லவா அவர். நாமும் நம் வாழ்வில் நடைபெறும் அனைத்தும் இறைவன் விருப்பப்படி நிகழ்கின்றன என்ற நம்பிக்கையையும், அதனால் விளையும் நன்மையான காரியங்களையும் எதிர்பார்த்து இருப்போம்.

பயணம் தொடர்கிறது . . .

பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியா - 21

தா.சுரேஷ், பூம்பொழில்நகர்

மிகுந்த தயாளமுள்ள தாய் மரியின் அன்புப் பிள்ளைகளே மாமரி கடவுளுக்கும், பாவிகளுக்கும் இடையே சமாதானம் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்ற நோக்கில் சென்ற இதழில் தியானித்தோம். மாமரி நம் தேவைகளில் நம்மீது தயவிரக்கம் காட்டி நமக்கு உதவ மாமரி எப்போதும் விழிப்பாயிருக்கிறார்கள் என்பதை குறித்து இந்த இதழில் சிந்திப்போம்.

பல கண்களை உடைய மாமரி:

புனித எப்பிஷபானியுஸ் மாமரியைப் "பல கண்களை உடையவர்கள்" என்று அழைக்கிறார். இதன் மூலம் இவ்வுலகில் பரிதாபத்திற்குரிய படைப்புகளாகிய நமக்கு உதவுவதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பதை அவர் குறித்துக் காட்டுகிறார். மாமரி பரலோகத்திலிருந்து மிக அநேக இரக்கச் செய்திகளை உலகிற்குக் கொண்டு வருவதால், புனித அவெல்லினோ பெலவேந்திரர் மாமரி அன்னையை "பரலோகத்தின் விசேஷ தூதுவர் " என்று குறிப்பிடுகிறார். இயேசு தம் அன்னையிடம், அம்மா நீங்கள் விரும்பும் எதையும் என்னிடம் கேளுங்கள் என்று கூற, அதற்கு அன்னை மாமரி நான் பாவிகளுக்காக இரக்கத்தைக் கேட்கிறேன் என்று கூறினார்கள் என்பதை புனித பிரிஜித்தம்மாள் கேட்டாள். மாமரி இவ்வுலகில் வாழ்ந்த போதும், தற்போது மகிமையில் விண்ணகத்தில் இருக்கின்ற போதும் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பங்களை காண்கின்றவர்களாக இருக்கின்றார்கள். கடவுளுக்கு அடுத்தபடியாக அன்னை மாமரி அனைத்தையும் காணும் வரம் பெற்றவர்களாக இருப்பதால் எல்லோருக்காகவும் பரிந்துபேச இரக்கம் நிறைந்த தாயாக இருக்கின்றார்கள்.

தயவோடு நமக்காக வேண்டி மன்றாடுகிற தாய்:

இந்த கட்டுரையை எழுதும் நான், பூம்பொழில் நகர் பங்கில் வசித்து வருகிறேன். நான் அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்று செங்கல்பட்டு மாவட்டத்தில் வடக்குவாயலூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்த போது, அப்பள்ளியில் பணியாற்றிய ஏழு ஆசிரியர்களில் ஐந்து ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் பணியிடமாற்றம் பெற்றுச் சென்றனர். அவர்களுக்கு

பதிலாக வேறு ஆசிரியர்கள் இப்பள்ளிக்கு பணியிடமாற்றம் பெற்று வரவில்லை. நானும் இரண்டு ஆசிரியர்களும் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களை தினந்தோறும் கவனித்து கொள்வது மிகுந்த சிரமமாக இருந்தது. இந்த சூழ்நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்த போது, பூம்பொழில் நகர் அமலோற்பவ மாதா சிற்றாலயத்தில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்று ஜென்மபாவமில்லாமல் உற்பவித்த அர்ச்.மரியாயே பாவிகளுக்கு அடைக்கலமே இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தேன். ஆசிரியர் பற்றாக்குறையால் எனக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று சொல்லி ஒரு அருள்நிறை மந்திரம் செபித்து ஒப்புக்கொடுத்து வந்தேன். ஆச்சரியம் என்னவென்றால் அரசு ஒரு புதிய முயற்சியாக பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிகமாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று அரசாணை வெளியிட்டது. இதனால் ஆசிரியர் பற்றாக் குறையினால் எனக்கு ஏற்பட்ட சிரமங்களும் குறைந்தது.

எனவே அன்னை மரியாள் தயவோடு நமக்காக பரிந்து பேசுகின்றார் என்பதில் நாம் மிகுந்த நம்பிக்கையோடு இருக்கலாம். புனித ஹில்டபெர்ட், எங்கள் தகுதிக்கு மிகமிக மேலான நன்மைகளை எங்களுக்கு பகிர்ந்தளிப்பதை அன்னை மரியாள் ஒருபோதும் நிறுத்தவதேயில்லை என்று கூறுகிறார்.

தயவிரக்கத்தின் தாய்:

இயேசு தன்னுடையதிவ்யமாதாவிடம், அம்மா, உங்கள் உதவியைபக்தியோடு இரந்து மன்றாடும் எல்லாப் பாவிகளையும் என்னோடு மறு ஒப்புரவாக்கும் வல்லமையை நான் உங்களுக்கு தந்தருளியிருக்கிறேன் என்று கூறுவதாக புனித ஜெர்த்ரூத்தம்மாள் கூறியுள்ளார். மாமரி தயவிரக்கத்தில் செல்வச் செழிப்புள்ளவர்களாக இருப்பதால் பாவிகளாகிய நமக்கு உதவி செய்ய வல்லவர்களாகவும், ஆன்ம வறுமை எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு, நமக்கு உதவி செய்து பாதுகாப்பதில் தன்னையே அதிகமாக ஈடுபடுத்திக் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இறுதியாக....

கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். எதைக்கேட்டால் எது கொடுக்கப்படும்? ஆன்ம நலனை நாம் கேட்போமென்றால் நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிற சரீர நன்மைகளும் சேர்த்தே கொடுக்கப்படும். எனவே தயவிரக்கத்தின் தாயாக விளங்கும் அன்னை மாமரியிடம் தஞ்சம் புகுவோம். நம்முடைய தேவைகளை அன்னை கவனித்துக்கொள்வார்.

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச்.மரியாயே பாவிகளுக்கு அடைக்கலமே இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தேன். எங்கள மீது இரக்கமாயிருந்து எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை மன்றாடும் - ஆமென் (1 அருள்)

கிறிஸ்தவர்களின் சகாயமே

அருட்பணி **லூர்துசாமி** ம.ஊ.ச
நலதுறவியர் இல்லம், மாமல்லபுரம்



மரியா கிறிஸ்துவுக்குப் பிறப்பளித்ததன் வழியாக கிறிஸ்தவர்களுக்கும் பிறப்பளித்திருக்கின்றார். கிறிஸ்துவுக்குத் தாயான மரியா கிறிஸ்தவர்களுக்கும் தாயாகின்றார். கிறிஸ்து என்னும் ஒரு விதையிலிருந்து விருட்சமான திருஅவையின் பெருவளர்ச்சிக்கு மரியாவின் பங்கு மிகப் பெரியது. கிறிஸ்தவர்களை ஆதரித்து அவர்களின் துன்பவேளையில் துணைநின்று வேதனைகளைச் சாதனைகளாக்கி தோல்விகளை வெற்றிகளாக்கி தரித்திரங்களை சரிததிரங்களாக்கிய மரியா கிறிஸடதவர்களின் சகாயமாக விளங்கியதால்த்தான் இன்னும் இந்தத் திருஅவை வேர்கள் விட்டு விழுதுகளொடு நிற்கின்றது. கணக்கிலடங்காத பேருதவிகள் எண்ணவியலாத அருங்காட்சிகள் இவைகளணைத்தும் மரியா கிஙிஸ்தவர்களின் சகாயம் என்பதற்காக அத்தாட்சிகளும் ஆதாரங்களுமேயாகும்.

தொடக்ககால பக்தி

மரியாவை "சகாய அரசி" என்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதிகால பைசான்டைன் ஏடுகள் கண்டுபிடித்துள்ளன. கி.பி 3-ஆம் நூற்றாண்டின் அழிந்தபோயிருந்த ஆப்பிரிக்க பேராலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் "புனித மரியே எங்களுக்கு உதவியருளும்" என்ற ஏடுகள் இடம்பெற்றுள்ளது. இது மரியா கிறிஸ்தவர்களின் சகாயம் என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்புள்ள கிரேக்க இலக்கியம் மரியாவைப்பற்றிய அறிய செய்திகளை கொண்டிருக்கும் புகலிடமாக விளங்கியது. மரியா இறைவனிடம் மக்களின் தேவைகளுக்காக பரிந்து பேசுவதாகவும் கிறிஸ்தவ மக்களைப் பாதுகாக்கும் உயர்ந்த பொறுப்பினை கடவுள் அவருக்கு அளித்திருப்பதாகவும் அவ்விலக்கியம் நமக்கு உணர்த்துகின்றது. "மரியே கிறிஸ்தவர்களின் சகாயமே" என்னும் தலைப்பானது கி.பி 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே லோரேட்த்தோ மன்றாட்டு மாலையில் அதாவது ஒவ்வொரு மாதமும் தியானிக்கின்ற இந்த மன்றாட்டு மாலையில் இடம்பெற்றுள்ளது.

மரியாவின் உதவியினால் 1571-ம் ஆண்டு Le panto வில் நடந்த போரிலும் 1683 ஆம் ஆண்டு வியன்னாவில் நடந்த போரிலும் கிடைத்த மாபெரும் வெற்றிகள் மரியா கிறிஸ்தவர்களின் சகாயம் என்ற தலைப்பினை பிரகடனப்படுத்தின. மேலும் வெற்றியின் மாதா மற்றும் செபமாலை மாதா என்னும் இத்தலைப்புகள் கூட இவ்வரலாற்றுப் பின்னனியில் வர்னிக்கப்பட்டன. கி.பி 16ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் வரையப்பட்ட மரியாவின் ஓவியமானது 1624 ஆம் ஆண்டு பவாரியாவிலுள்ள பாசாவில் கிறிஸ்தவர்களின் சகாயமான மரியாவுக்கு ஆலயத்தில வைக்கப்பட்டுள்ளது. ஆலயம் நோக்கி வரும் திருப்பயனிகள் "மரியே எங்களின் சகாயமே" (Maria Auxilium) என்னும் சிறு செபத்தை அர்ப்பணித்தனர். திருத்தந்தை 8ஆம் அர்பன் பாசா நகரின் மரியா கிறிஸதவர்களின் சகாயம் என்று பிரகடனப்படுத்தினார்.

கி.பி 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் நெப்போலியன் திருத்தந்தை 7 ஆம் பக்திநாதரை சிரையில் அடைத்ததைத் தொடர்ந்து செபமாலைப் பக்தி வளர்ந்து தான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதன் நன்றியாக கிறிஸ்தவர்களின் சகாய மாதாவுக்கு மே மாதம் 24 ஆம் நாள் விழா எடுக்குமாறு பணித்தார். புனித தொன்போஸ்கோ காலம் தொடங்கி மரியே கிறிஸ்தவர்களின் சகாயமே எசபிப்பதோடு மட்டுமில்லாமல் தங்களின் பாதுகாவலியாகவும் ஏற்றுக்கொண்டனர். சகாய அன்னை ஆஸ்திரேலியாவின் பாதுகாவலியாகவும் திகழ்கின்றாள்.

கிறிஸ்துவின் தாய் கிறிஸ்தவர்களுக்கும் தாய்:

புனித அகுஸ்தினார் கூறுகின்றார்: மரியா தனது அன்பினாலும் தியாகத்தினாலும் திருஅவையின் நம்பிக்கையாளர்களுக்கு பிறப்பளிப்பதில் அங்கம் வகிப்பதால் அவர் கிறிஸ்துவின் உறுப்பினர்களுக்கும் தாயாகின்றார் (LG.53) ஒரு தாயானவர் இயற்கையாகவே தனது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும் முன்னேறுவதிலும் மிகப் பெரும் இலக்கை நோக்கி வழிநடத்துவதில் சிறப்புப் பெறுகின்றார்.

மரியா திருஅவையின் தனிச்சிறப்புடைய அங்கத்தினராகத் திகழ்வதோடு நம்பிக்கை மற்றும அன்பு வாழ்வில் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றாள். மிகவும் அன்புநிறைந்த அன்னைக்கு தூய ஆவியால் வழிநடத்தப்படும் திருஅவை அன்புடனும் வணக்கத்துடனும் அவருக்கு மரியாதை அளிக்கின்றது.

மரியா கிறிஸ்துவுக்கும் திருஅவை முழுவதற்கும் தாயாக இருக்கின்றார் என்று திருத்தந்தை ஆறாம் பவுல் குறிப்பிடகின்றார்.

இவ்வாறு கிறிஸ்தவர்களின் தாயாகிய மரியா கிறிஸ்தவர்களின் சகாயமாயிரக்கின்றார் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. தனது பரிந்துரை செபத்தின் வழியாக திருஅவையின் வளர்ச்சிக்கும் அதன் வாழ்விற்கும் பெரும் பங்களித்திருக்கின்றார். மரியா தனது மகனின் விண்ணேற்புக்குப் பிறகு மரியா தனது செபத்தின் வழியாக திருஅவையின் ஆரம்ப வளர்ச்சிக்கு உதவினார் (LG.69). ஏற்கெனவே இயேசு பிறப்பு முன்னறிவிப்பின்போது தூய ஆவியாரால் ஆட்க்கொள்ளப்பட்ட மரியா திருத்தூதர்களோடும் பல பெண்களோடும் இணைந்து தூய ஆவியாரின் கொடைகளுக்காக வேண்டி செபிப்பதன் வழியாக மரியா கிறிஸ்தவர்களின் சகாயமாகின்றார்.

இவ்வாறு கிறிஸ்தவர்களின் தாயான மரியா தனது செபத்திலும் நமக்குத் தரும் ஆலோசனைகளின் வழியாகவும் கிறிஸ்தவர்களின் சகாயமாக பல வழிகளில் காட்சி தருகின்றாள். உதவி என்று நாடிவருவோருக்கு நம்மைத் தாங்கும் அவரது கரங்கள் என்றும் ஓய்வதில்லை ஓய்வெடுப்பதுமில்லை. நாடுவோரைத் தேடிவந்து தேற்றும் அவரது மனம் என்றும் குறைந்ததுமில்லை. ஏனெனில் மரியா இறைவனின் தாய். சீர் கெட்ட இச்சமுதாயம் சீர்பெற்றிட தனது உதவிக்கரத்தை நீட்டுகின்றாள். கறைபடிந்த மனித மனங்கள் நிறைவாகிட மகனிடம் பரிந்து பேசுகின்றார். சிறையுண்ட ஏழைகளின் ஒறைவிடமாய் தன்னையே தருகின்றார். இவ்வாறு அனைவருக்கும் தாயான பாக்கியம் அன்னை மரியாவைத் தவிர வேறுயாருக்கும் கிடைப்பதில்லை. இருப்பினும் கிறிஸ்து உலகிற்கு வருகை தர வழியாக இருந்த மரியா கிறிஸ்தவர்களுக்கும் வழிகாட்டியாக நின்று கிறிஸ்தவர்களின் சகாயமாக இருக்கின்றாள் என்பதே சிறப்பு.

கடவுளின் பரிசு

"மரியன்னை கடவுள் நமக்கு அளித்த மிகப்பெரிய பரிசு. அவர் நம் வாழ்க்கைப் பாதையில் எப்போதும் வழிகாட்டியாக இருக்கிறார்."

..... **போப் பிரான்சிஸ்**

அருட்சகோதரி உபால்தெஸ்கா

அருட்பணி. **பிலிப்பு சோசப்** ம.ஊ.ச ஜெர்மனி



அருட்சகோதரி உபால்தெஸ்கா சாந்தரெல்லி எளிமையானதுமான, ஆனால் உயர்ந்த ஒழுக்கம் கொண்ட ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே அவருடைய உறுதியான குணநலனும், நேர்மையான உள்ளமும் அனைவரையும் கவர்ந்தன. கூர்ந்த புத்திசாலித்தனம், அபாரமான கற்பனைத் திறன் ஆகியவற்றால் தனித்துவம் பெற்ற அவர், 18-ஆவது வயதில் நடந்த ஒரு பெரும் விபத்தில் அதிசயமாக உயிர் தப்பியபின், பிசா நகரத்து மரியின் ஊழியர் சபையில் இணைந்தார். 1950 ஆம் ஆண்டில் தனது முதல் துறவுச் வார்தைப்பட்டை செய்து, பின்னர் மிலானில் உள்ள பல்கலைக்கழகத்தில் இலக்கியத்தில் பட்டம் பெற்றார்.

படிப்பை முடித்தபின், துறவற வாழ்வில் முழுமையாக ஈடுபட்ட அவர், எந்தப் பொறுப்பும் வந்தாலும் அதனை முழுமனதோடும் அறிவோடும் செய்து, தன் விருப்பங்களை விட சமூக நலனையே முன்னிலைப்படுத்தினார். அவருக்கு எப்போதும் எளிமையான பணிகளே பிடித்திருந்தது. அதுவே அவர் வந்த பண்பாட்டின் இயல்பாகவும், தாழ்மையான உள்ளத்தின் வெளிப்பாடாகவும் இருந்தது.

அருட்சகோதரி உபால்தெஸ்காவின் நம்பிக்கை எப்போதும் நற்செய்தியில் வேரூன்றியதாக இருந்தது. கடவுளின் அன்பை தன் வாழ்வில் ஆழமாக அனுபவித்ததோடு, அந்த உற்சாகத்தை மற்ற சகோதரிகளுக்கும் எளிமையாகப் பரப்பினார். தொடக்கத்திலிருந்தே புதிதாக துறவறம் சேர்ந்தவர்களின் ஆசிரியையாகவும், பின்னர் பல்வேறு பொறுப்புகளில் இருந்தும், இறை அணைப்பை அன்பை பரப்ப பணியாற்றினார். இரண்டாம் வாடிகன் சங்கத்திற்கு பிந்தைய புதுப்பிப்புகளின் காலத்தில், தனது புத்திசாலித்தனத்தாலும் முன்னோக்கிய பார்வையாலும் சபைக்கு புதிய சட்டங்களை உருவாக்கும் பணியில் முன்னோடி ஆனார். ஏழு புனிதர்களின் ஆன்மிகத்தையும் பிசா நகரத்து மரியின் ஊழியர் கன்னியர்கள் சபையை தொடங்கிய சகோதரிகளின் நோக்கத்தையும் நவீன காலத்திற்கேற்ப நற்செய்தியின் விளிம்பியன்களோடு இணைத்து, புதிய மறைபரப்பு பணி மலர்ச்சிக்குத் தளமிட்டார். அவரது வாழ்வின்

உச்சமாக 1977 இல் இந்தியாவில் முதல் பணியை தொடங்கினார். அதன் பின் 1990 இல் பிலிப்பைன்ஸ், 2000 இல் அல்பேனியா, 2003 இல் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் பணி விரிந்தது. உடல் சக்தியைச் சிதைக்கும் அளவிற்கு உழைத்த போதும், அவருடைய தனித்துவம், உறுதி, அர்ப்பணிப்பு எல்லோருக்கும் ஒரு உந்துசக்தியாக இருந்தது. மத்ரே உபால்தெஸ்காவின் வாழ்வை " "இங்கே நான் வருகிறேன்" (இத்தாலிய மொழியில் eccomi) என்ற பதிலால் சுருக்கலாம். அது கடவுளின் அழைப்பிற்கும், சகோதரிகளின் வேண்டுகோள்களுக்கும், சந்தித்த ஒவ்வொருவரின் தேவைகளுக்கும் அவர் எப்போதும் அளித்த பதில். இறுதியில், 18 மே 2007 அன்று, அன்னை மரியாளின் பாடலை கண்ணீர் கலந்த குரலில் பாடிக்கொண்டே அவர் ஆண்டவரின் சந்நிதிக்கு சென்றார். ஆனால் அவர் விட்டுச் சென்ற வழிகாட்டுதல், இன்றும் தொடர்கிறது.

அருட்சகோதரி உபால்தெஸ்கா சாந்தரெல்லியின் தன்னலம் பாராது பிறருக்காக வாழும் வாழ்க்கைதான் உண்மையான மகிழ்ச்சி தரும் என்பதை அவர் நமக்கு கற்றுத் கொடுத்துள்ளார். இவரையும் புனிதராக்கும் பணி விரைவில் தொடரும்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சி 2: தாயைக் காத்த ஜீவ மாதா

சாட்சி பகிர்பவா: பெரிய நாயகி மேரி (சாந்தோம் பங்கு)

கடந்த டிசம்பர் 29 அதிகாலை என் தாயாருக்குத் திடீரென தீவிர மாரடைப்பு ஏற்பட்டது. மயிலாப்பூர் காவேரி மருத்துவமனையில் அனுமதித்தபோது, இதயத்தில் 4-5 இடங்களில் அடைப்புகள் உள்ளதாகவும், இதய இயக்கம் 20மூ - 25மூ மட்டுமே இருப்பதால் உயிருக்கு ஆபத்தான நிலையில் (ஆறு மணி நேரமே அவகாசம்) உள்ளதாகவும் கூறினர். ஓபன் ஹார்ட் சர்ஜரி செய்ய வேண்டும் என்றும் அதிர்ச்சி அளித்தனர்.

எனக்குக் குழந்தை பாக்கியம் அருளிய ஜீவ மாதாவிடம் அழுது புலம்பி ஜெபித்தேன். மாதாவின் அற்புதத்தால் இதய இயக்கம் 40மூ ஆக உயர்ந்து, ஆஞ்சியோ மூலம் ஒரே ஒரு அடைப்பு மட்டுமே சரிசெய்யப்பட்டது. பின்னர், இரண்டு லட்ச ரூபாயில் ஸ்டென்ட் வைக்க வேண்டும் என்ற நிலை மாறி, ஒரு வாரம் கழித்துப் பரிசோதித்த மருத்துவர்கள் வியக்கும் வண்ணம், வெறும் 2000 கட்டணத்தில் மாத்திரைகளிலேயே குணமாகி வீடு திரும்பினார் ஜீவ மாதாவுக்கு என் நன்றி



திருஅவை வரலாற்றில் அன்னை மரியாவின் காட்சிகள்

அருட்பணி. **ஜெகநாதன்** ம.ஊ.ச திருச்சி - 21

மரபு வழியாக மிகவும் பரவலாக கருதப்படும் நிகழ்வு என்னவெனில் புனித தோமினிக் மற்றும் புனித கத்தரினா சீயன்னா ஆகியோருக்கு அன்னை மரியா செபமாலையை வழங்கியதாகக் கூறப்படும் பாரம்பரியமாகும். மற்றும் அன்னை மரியா பல புனிதர்களுக்கு காட்சி கொடுத்ததாக அவர்களுடைய வாழ்க்கை சரிதையில் கூறப்பட்டுள்ளது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அசிசி நகரத்து புனித கிளாரா கோர்டோனாவின் புனித மார்க்ரட் சுவீடனின் புனித பிரிஜிட் ஹாக்கெபோர்னின் புனித மத்தில்தா ஆகியோர்.

அசிசி நகரத்து புனித கிளாரா (1094-1125):

புனித அசிசி நகரத்து பிரான்சிஸின் ஆன்மீக மகளாகவும் ஏழைக் கிளாரியர் (Poor Clares) பெண் துறவர சபையினரின் நிறுவுனராகவும் விளங்கினார். அவர் தனது வாழ்வு முழுவதும் மிகுந்த தாழ்மை, ஏழ்மை, செபம் மற்றும் அன்னை மரியா மீது ஆழ்ந்த பக்தியுடன் வாழ்ந்தார். பாரம்பரிய மரியன்னை பக்தி நூல்களில் குறிப்பிட்ட இடைக்கால மரபுகளில் புனித கிளாராவுக்கு அன்னை மரியா பலமுறை ஆறுதல் அளிக்கும் விதமாக தோன்றியதாகக் கூறப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் புனித கிளாரா கடுமையான நோயால் படுக்கையில் இருந்தபோது அன்னை மரியா விண்ணக மகிமையுடன் கன்னியர் குழுவினரால் சூழப்பட்டு அவருக்குத் திருக்காட்சி தந்ததாகக் மரபு கூறுகின்றது. அப்பொழுது அன்னை மரியா அவரின் படுக்கை அருகே வந்து தாயன்போடு அவரை ஆற்றுப்படுத்தி அவரது நம்பிக்கையையும் துறவற அர்ப்பணிப்பையும் பாராட்டினார். இந்தக்காட்சி கிளாராவிற்கு மிகுந்த ஆன்மீக வலிமையையும் அமைதியையும் அளித்தது. தனது இறுதி நாட்களில் அவர் அனுபவித்த துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவும் இறைவனின் அனபில் நிலைத்திருக்கவும் இந்த அருள் அனுபவம் உதவியதாகக் கூறப்படுகின்றது. இந்த நிகழ்வு அன்னை மரியா தனது மகனாகிய ஈயேசுவை முழுமனதுடன் பின்பற்றும் மக்களை ஒருபோதும் கைவிடாமல் தாயாக வழிநடத்தி ஆறுதல் அளிப்பவர்

என்பதை எடுத்துக்காட்டுகின்றது. புனித கிளாராவின் வாழ்க்கை மரியாவின்மீது அசைக்க முடியாத நம்பிக்கையையும் இறைவனுக்கான முழுமையான அர்ப்பணிப்பையும் கொண்ட வாழ்வின் சிறந்த காட்சியாகத் திகழ்கின்றது.

கோர்டோனாவின் புனித மார்க்ரட் (1247-1297):

இவர் புனித பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையைச் சார்ந்த பிகப் பெரிய தவ வாழ்க்கை வாழ்ந்த புனிதருள் ஒருவர். தனது இளமைக் காலத்தில் பாவ வாழ்க்கை வாழ்ந்தவர் தனது துணைவர் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆழ்ந்த மனமாற்றம் பெற்று முழு வாழ்க்கையையும் இறைவனுக்கும் ஏழைகளுக்கும் அர்ப்பணித்தார். அவரது ஆன்மீக அனுபவங்கள் அவரது ஆன்மீகக் குருவான அருட்பணி. ஜியுன்டா பெருவஞ்ஞாத்தி (Giunta Bevegnati) எழுதிய Legenda Beatae Margaritae என்னும் வாழ்க்கை வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

புனிதமார்க்ரட் வாழ்க்கை வரலாற்றில் அவர் பலமுறை இயேசுவின் மற்றும் விண்ணகப் புனிதர்களின் ஆன்மீகக் காட்சிகளைப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அவற்றுள் அன்னை மரியாவின் திருக்காட்சியையும் முக்கியமானதாக மரபில் கூறப்படுகின்றது. ஒருமுறை கடுமையான தவ வாழ்க்கையிலும் தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மையிலும் மனவேதனையில் இருந்தபொழுது அன்னை மரியா அவருக்கு காட்சி தந்து அவரைத் தனது மகளாக ஏற்றுக்கொள்வதாகவும், மனம் திருந்தி வாழ்பவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடமாட்டார் என்றும் ஆறுதல் கூறியதாக பாரம்பரிய மரபு விவரிக்கின்றது. அன்னை ரியா மார்க்ரட்டை இயேசுவின் சிலுவை அன்பில் நிலைத்திருக்கவும் ஏழைகளுக்கு சேவை செய்வதிலும் தொடர்ந்த செபவாழ்வில் உறுதியாக இருக்கவும் ஊக்குவித்தார் என்று கூறப்படுகின்றது. இந்த புனித அனுபவம் அவரது தவ வாழ்க்கையை மேலும் ஆழப்படுத்தியது. புனித மார்க்கரட் "மனந்திருப்பியோரின் மகதலா" (Second Mary Magdalena) என்று அழைக்கப்படுகின்றார். அவரது வாழ்வு எந்த நிலையிலிருந்தும் இறைவனின் அருளால் மனிதன் புனித நிலையை அடைய முடியும் என்பதற்கு வல்லமையான சாட்சியாக விளங்குகின்றது.

சுவீடனின் புனித பிரிஜிட் (1303-1373) (St. Brigget of Sweden):

இவர் கத்தோலிக்கத் திருஅவையின் மிகப் புகழ்பெற்ற மறைவல்லுனர்களில் (Mystics) ஒருவராவர். இவர் திருமணமானவர் எட்டுக் குழந்தைகளின் தாயாகவும் பின்னர் துறவற வாழ்வை மேற்க்கொண்டவர். இவர் தன் வாழ்நாள் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் பாடுகள் அன்னை மரியாவின் வாழ்க்கை மற்றும் திருஅவையின்

புதுப்பிப்பு குறித்து ஒற்றுமைக்காக இறையருள் காட்சிகளைப் பெற்றார். இவர் பெற்ற வெளிப்பாடுகள் ர்நயஎநடெல சுநஎநடயவழைளெ என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. புனித பிரிஜிட் வாழ்வில் அன்னை மரியா நேரடியாகப் பேசியதாகப் பதிவுகளட காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று ஒரு திருக்காட்சியில் அன்னை மரியா தனது குழந்தைப்பருவம், கன்னித் தன்மை, இறைவனின் திட்டத்திற்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்த வாழ்க்கை இயேசுவின் பிறப்பு மேலும் அவருடைய தாய்மையின் மகிமை ஆகியவற்றை பிரிஜிட்டிடம் விளக்கினார். இதன் வழியான அன்னை மரியாவின் தாழ்ச்சி தூய்மை மற்றும் இறைவன் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையை நமக்கு வெளிப்படுத்துகின்றது. பிரிஜிட்டின் காட்சிகளை திருஅவை மதிப்புடன் கருதுகின்றது. இருப்பினும் அவை தனிப்பட்ட வெளிப்பாடுகள் என்பதால் கத்தோலிக்க நம்பிக்கையாளர்கள் அவற்றை நம்புவது கட்டாயமான நம்பிக்கைக் கோட்பாடு அல்ல. ஆனால் அவை கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்த உதவும் அருள்மிக்க காட்சிகளாக திருஅவையால் மதிக்கப்படுகின்றன.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சி 3: நொடியில் வலி தீர்த்த ஜீவ மாதா

சாட்சி பகிர்பவர்: மோட்சமேரி (தர்காஸ் பங்கு)

ஒருநாள் நடுஇரவு 12 மணி அளவில் எனக்குக் கடுமையான நெஞ்சு வலியும், இடது கையில் தீவிர வலியும் ஏற்பட்டது. வீட்டில் பிள்ளைகள் தூங்கிக்கொண்டிருந்ததால், மருத்துவமனைக்குச் செல்லாமல் மாதாவிடம் என் பாரத்தைச் சமர்ப்பித்தேன்.

"ஜீவ மாதாவே என் உயிரை உன் கைகளில் ஒப்படைக்கிறேன். நீயே என்னைக் குணப்படுத்து" என்று வேண்டிக்கொண்டு படுத்தேன். காலை 5:30 மணிக்கு விழித்துப் பார்த்தபோது, வலிகள் அனைத்தும் மாயமாய் மறைந்திருந்தது இப்போது கூட எப்போது வலி வந்தாலும், ஜீவ மாதாவின் திருப்பெயரைச் சொல்லி, மூன்று அருள் நிறைந்த மரியே ஜெபம் சொன்ன கணத்திலேயே வலி குணமாகிவிடுகிறது. ஜீவ மாதாவுக்கு நன்றி

விவிலிய வினாடி வினா

சரியான விடைகளை எழுதியவர்கள்

அருட்சகோதரிகள்

மேரிமௌரிஸ்- மாதாகோட்டை, மேரி செசாரியா- மாதவரம்இ சென்னை, லில்லி புஸ்பம்- மாதாகோட்டை, அசுந்தா-தூத்துக்குடி, லோராமேரி-தூத்துக்குடி, லீமா-களியக்காவிளை, செர்வைட் கான்வென்ட் தோகமலை, திரோன்- இடிந்தகரை, புஸ்பம் சிந்தாமனி, ஜூலி எலிசபெத்-மாதாகோட்டை, ரொமானா-தூத்துக்குடி, சோசபிட்டாமேரி-திருச்சி, ஜெயமணி-மதுரை, ஜோசிஜெயராணி-திருச்சி, பிரேமா-திண்டுக்கல், ஜெரி மேரி-தூத்துக்குடி, ரூபல்லாமேரி-தூத்துக்குடி, ரஞ்சிதம்- மதுரை, புஸ்பாமேரி-மதுரை.

பொதுநிலையினர்

இருதய விஜீலா-திண்டுக்கல், அற்புத சீலி-திண்டுக்கல், செலின் மேரி-திருச்சி-21, மேரி மார்க்ரட்- திருச்சி 21, ஆனிபீட்டர்ராஜ்- திருச்சி 21, மாசில்லா-தூத்துக்குடி, புஷ்பகண்ணு-கோயம்புத்தூர், சோசப் தக்கர்-திருச்சி 21, ஆன்டனி செரின் -சென்னை, அனிரூத் ஜெய்டன்-திருச்சி, ஹெர்மன்-தூத்துக்குடி, பாத்திமா-திருச்சி-21, பிரான்ஸிஸ்பேசில்-திருச்சி, லீமாதெரஸ்-திருச்சி, அமல செல்வி-திண்டுக்கல், லீலாவதி-திண்டுக்கல், சிப்ரியன்-தெளி, மிக்கேல்சாமி-கோவை, ஜோஸ்பின்மேரி-திண்டுக்கல், டைமி-சென்னை.

குழுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

திருமதி. அற்புதசீலி - திண்டுக்கல்

அருட்சகோதரி. மேரிசெசாரியா - மாதவரம் சென்னை.

Owned and Published by **THE ORDER OF SERVANTS OF MARY** from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097. and Printed by **M. RAJA REGAN** at **Devan Press**, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014. Editor: **Fr. SAMYDURAI OSM.**

நீ என்னை மகிமை செய்ய செய்ய
நான் உன்னை மென்மேலும் ஆசிர்வதிப்பேன்



குழந்தை இயேசுவே
எங்கள்மேல் இரக்கமாயிரும்

குழந்தை இயேசு ஆலயம்

பரமேஸ்வரன் நகர், சோழிங்கநல்லூர், சென்னை 600119

INFANT JESUS
HAVE MERCY ON US

INFANT JESUS CHURCH

Parameswaran Nagar, Sholinganallur, Chennai 600119

Parish Priest - Rev.Fr.Antony Samy,OSM | **Parishioner**

Website: www.infantjesussholinganallur.org Ph: +919600393380

Jeevanadha Annual Feast
1st Saturday of December

Parish Annual Feast 2nd
Sunday of February

ஜீவனாதா திருவிழா
டிசம்பர் முதல் சனிக்கிழமை

பங்குத்திருவிழா பிப்ரவரி
இரண்டாம் ஞாயிறு

திருப்பலி நேரம்

திங்கள் - சனி மாலை 6.30 மணி (தமிழ்)

ஞாயிற்றுக்கிழமை

காலை 7.00 மணி & 8.30 மணி (தமிழ்)

காலை 10.30 மணி & மாலை 5.00 மணி (ஆங்கிலம்)

மாதத்தின் முதல் சனி ஜீவமாதா நவநாள் ஆராதனை, திருப்பலி காலை 10.30 மணிக்கு தடைபெறும்

Mass Timings

Mon - Sat 6.30 PM (Tamil)

Sunday

7.00 AM & 8.30 AM (Tamil)
10.30 AM & 5.00 PM (English)

First Saturday of Every Month Jeevanadha Novena, Adoration and Mass at 10.30AM

